1408

உ

பரமபதிதுணை.

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பெனியார்

T. நாராயணசாமிபிள்ளை கம்பெனியார்

முதலியோர்

1408
22
4

நடித்துவருகிற

அதியற்புத நவீன பார்ஸீ

சத்தியவான் சாவித்ரி.

ஓர் கற்பலங்கார நாடகம்.

இரண்டாம் பாகம்.

12 DEC 1922

இஃது

முத்தமிழ் க்ஷேத்திரவித்வரத்தினம்

ஆ. டீ. சதாசிவதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்றது.

மதுரை புத்தகவியாபாரம்

T. கிருஷ்ணசாமிபிள்ளை

வெளியிட்டது.

[illegible]] 1922 [இதன்விலை அணா 4

Q-,1M559,5
N22
125413

[illegible] சம் பிரஸ் வடக்குமாசிவீதி மதுரை

நூதன புத்தகவிளம்பரம்

R K பூமிபாலகதாஸரவர்களால் இயற்றப்பெற்ற இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த்திலகம் ஆப்டோன் படங்களுடன் கூடியது.	0—4—(
பறையன் பாட்டு என்ற அதிநூதன விகட வேடிக்கைப் பாட்டும் கலிகாலச் சிந்தும் சேர்ந்துள்ளது.	0—1—0
சுப்பிரமணியர் தியானம் என்ற ஆண்டிப்பண்டாரம் பாட்டும் திருப்புகழ்ப் பாடல்களும் சேர்ந்துள்ளது.	0—1—0
சுப்பிரமணியர் வளையல் சிந்து.	0—1—0
அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து	0—2—0
அழகர் வர்ணிப்பு	0—1—0
பாலாபிஷேகக் காவடிச்சிந்து.	0—1—0
சிறுத்தொண்டன் கும்மி	0—2—0
சிறுத்தொண்டன் டிராமாசரித்திரம்	0—4—0
முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் [கற்புநிலை] பார்ஸி சதாரம் சரித்திரம்.	0—6—0
கந்தன் சரித்திரம் டிராமா [1-பாகம்]	0—3—0
முத்தமிழ் க்ஷேத்திர வித்வரத்தினம் A. S. சதாசிவதாஸரவர்களியற்றிய இந்துதேசாபிமானிகள் ஜீவியசெந்தமிழ்த் திலகம் ஆப்டோன் படங்களுடன் கூடியது	0—4—0
ஷையார் இயற்றிய சத்தியவான் சாவித்திரி சரித்திரம் 1-ம் பாகம்.	0—4—0
ஷை இரண்டாம் பாகம்	0—4—0
மாரியம்மன் தாலாட்டு	0—2—0
நடராஜப்பத்து	0—1—0
கலியுகமகத்துவ காலக்கியானம்	0—1—0

துப்பறியும் இனிய தமிழ்நாவல்கள்.

ஆனந்த பத்மினி அல்லது அஞ்சனக்கோட்டையின் அதிசயங்கள்.	0—8—0
கமலநாதன்	1—4—0
தசரதி அல்லது மங்களாபுர இரகசியம்.	0--12—0
ஜீவகன்.	1—0—0
வான நிதி.	0--12—0

T. கிருஷ்ணசாமிபிள்ளை,
புத்தகவியாபாரம்,
புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதி துணை.

பார்ஸி

சத்தியவான்—சாவித்திரி.

(இரண்டாம் பாகம்)

அங்கம் 5. 2-வது சீன் தொடர்ச்சி.

மத்ராபுரி அரண்மனை; நாரத முனிவர், அசுவபதி, மாலவி முதலியோரின் சம்பாஷணை

நார:—அசுவபதியரசே! நின் புத்திரிமுதலாக யாவரும் க்ஷேமந் தானே?

அசு:—சுவாமி! தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்ற எமக்கு யாது குறை? யாவரும் க்ஷேமமே!

நார:—நல்லது; மாலவி! யான் சாவித்திரியைப்பார்த்து அநேக நாட்களாகின்றன அல்லவா?

மால:—ஆம்; சுவாமி! அவளைக் குழந்தைப் பருவத்தில் பார்த்தீர்கள்; யான் இப்போது தங்களைக்கண்டதும் அவளை அழைத்து வருமாறு ஆளனுப்பி விட்டேன். இதோ வந்துவிடுவாள்.

நார:—மெத்த சந்தோஷம்; வேந்தே! நான் இங்குவரும் பொழுது தாம் மாலவியுடன் ஏதோ ஓர் முக்கியமான விஷயத்தைப் பற்றி இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தீர் போலும். அதையும் கவனியாது திடீரென யான் இங்குவந்துவிட்டதைப்பற்றி

அசு:—சுவாமி! சுவாமி! அப்படிச் சொல்ல வேண்டாம். தங்களுக்குத் தெரியாத இரகசியங்களும் உளவோ? எல்லாம் தாங்கள் அறியக்கூடியதும், இனிமேல் தாங்கள் அறிந்தி

ருப்பீர்களென யான் நினைப்பதும், இனி தங்களாலேயே நிறைபெற வேண்டியிருப்பதுமானகாரியந்தான்.

நார:—ஓ! அவ்வாறாயின் நின் புத்திரியின் மணத்தைக் குறித்தோ?

மால:—ஆம்; ஆம்; சுவாமி! அதேவிஷயத்தைக்குறித்துத்தான் யாம் யோசித்துக் கொண்டிருந்தோம். யாம் முன்செய்த நற்றவப் பயனுந் தங்களாகவே ஈண்டு பிரசன்னமானீர்கள். இனி அக்காரியம் தங்கள் கிருபையினாலேயே

[சாவித்திரி வருகிறாள். தாய் தகப்பன்மாரை வணங்க, தாய்மூலமாக அருகிலமர்ந்திருப்பவர் நாரதமுனிவரெனத் தெரிந்து அவர் அருகடைந்து]

சாவி: தாரான போவுதாா—என்ற வர்ணமெட்டு

பல்லவி

பாதாரம் போற்றினேனும் (பா)

அநுபல்லவி

பங்கேருகவ லங்காரமிகும் (பா)

சரணம்

ஆதாரமும்மையன்றி ஏதாகிலும்வேறுண்டோ
ஆருயிரனை யருந்தவமுறை
நாரதமுனி நாதா நின்திருப் (பா)

தொகையறா

மாதா பிதாகுரு தெய்வமென்றவனியோர்
வழமைக்கிதமாய்ப் புகன்ற
வேதாகமப்புராண விதிமுறையில் வழுவாது
வேண்டித்துதித்து நின்ற

சரணத்தொடர்

மாசறுமென்பாற்களித்து ஆசிர்வாதமளித்து

மர்மமிலர்துயர் மாதவரேயென்
ஜென்மமீடேறிடத் திருவருள்செயும் (பா)

வசனம்

ஸ்வாமி! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

நார:—தீர்க்க சுபமங்கலிபவந்து! சாவித்திரி! கடவுள் கிருபையால் தக்க மணாளனையடைந்து சுமங்கலியாய் நீடூழிவாழ்வாயாக!

[சாவித்திரி நாணமுற்று ஓர்புறமாக ஒதுங்குகிருள்]

வேந்தே! சாவித்திரிக்கு எந்த வரனை நிச்சயித்தீர்கள்?

மால:—சுவாமி! உலகிலுள்ள அரசகுமாரர்கள் யாவரையும்பற்றிச் சிந்தித்தோம்; ஒன்றும் நிச்சய முறவில்லை. அன்னவள் ஒரு வரனை நிச்சயித்திருக்கிருள்; அதைத்தாங்களே விசாரித்தறியுங்கள்.

நார:—(சற்று யோசித்து) வேந்தே! என்னிடம் கூற நாணுவாள்; ஆதலின் நீரே விசாரியும்

அசு:— மயிலே உன் சாயல் கொண்ட—என்ற மெட்டு

கண்ணிகள்

கண்ணேவாராயென்புத்ரி கற்பிலுயர் சாவித்ரி
எண்ணமெதோவுரைத்தா லீடேற்றுவேன்க்ஷணத்தில்

வசனம்

அடி என் அருமைக் குழந்தாய்! உனக்கு மணமுடித்துவிட வேண்டுமென யான் எத்தனேயோ வரன்களைப்பற்றிச் சிந்தித்தும் ஒரு முடிவிற்கும் வந்தேனில்லை. நீ ஏதோ ஓர்வரனை நினைத்திருப்பதாக நின்தாயார் மூலம் தெரிவதால் அதை இன்னதெனச் சீக்கிரம் தெரிவி. அவ்வாறே முடித்து வைக்கிறேன். நின் மனதிலிருப்பதை ஒருவரிடமும் தெரிவிக்காமல் நீன் கைந்துநாட்களாக அமிர்தத்தையொத்த

பாட்டு

உணவையருவருத்தாய் உடையைமிகவெறுத்தாய்
குணமறவே சலித்தாய் கூசியேயகந்திகைத்தாய்

வசனம்

அன்னத்தையும் ஆடை யாபரணங்களையும் வெறுத்து விட்டாய். அன்றியும் நெடுநாள் திரேகஅசௌகரியமாக விருந்தவர்களைப் போல் இளைத்துவிட்டாய். உன் எண்ணத்தை எங்களிடம் எவ்விதம் தெரிவிப்பதென வெட்கித் திகைத்தனை போலும்! கல்வியிற்றேர்ந்த உனக்கு இது அழகல்ல. சீக்கிரம் உள்ளதைத் தெரிவியம்மா

[சாவித்திரிஒன்றும் கூறுதவளாய்த் தரையையேநோக்கி நிற்கிறாள்]

நார:—சாவித்திரி! இதென்ன பேதமை! நான் இங்கிருப்பதால் கூற வெட்குகின்றாயோ? வேண்டாம்; என்னை அந்நியமாகக் கருதாதே.

[சாவித்திரி பேசாதிருக்கிறாள்]

மாலவி! சாவித்திரியைப் பெற்றவள் நீயாதலின் உன்னிடந் தவிர வேறொருவரிடம் சொல்லாள்போலும். நீயே அவளைத் தேற்றி நினைத்ததை இங்கு சொல்லச் சொல்லுவாய்.

மால:—

பாட்டு

என்னருமைக்குயிலே ஏதோவினும்பயிலே
நன்னயமாயுரைப்பாய் நாணம் வேண்டாமயிலே

வசனம்

அம்மா! பெற்றோர்களிடம் கூற நாணுவையாயின் நீ கொண்ட எண்ணம் எவ்விதம் முடிவுறும்? வேண்டாம்; சீக்கிரம் சொல்லு.

[சாவித்திரி பேசாதிருக்கிறாள்]

நார:—(ஆசனத்தைவிட்டெழுந்து)

பாட்டு

மன்னுநின் அருந்தவப்பெண் வரனொருவனையகத்தின்
எண்ணினாள்யானிருப்பின் இயம்பாள் செல்வேனெனக்கென்

வசனம்

வேந்தே! நின்புத்திரி கருத்தில் எதோ ஒருவரனை நினைத்திருப்பது வாஸ்தவமே. யானிங்கிருப்பின் சொல்லமாட்டாள் போலும்! எனக்கென்ன; யான்செல்கிறேன்.

[செல்வதாய் அபிநயிக்கிருர்]

சாவி:—(முனிவர்பின் தொடர்ந்து நமஸ்கரித்து) சுவாமி!

தொகையரா

முன்னமென்னெண்ணமே முற்றுமிசைந்துற்றதை
மொழிகுவேன் மொழிகுவேனே
பொன்னே நிகர் சாலவ புரியாளுமரசரின்
புத்திரர் சத்யவானே

பாட்டு

பூவனந்தன்னிலன்று போந்துலவுதல்கண்டு
தாவியிருவரொன்று மேவினேமுடிப்பீரின்று

வசனம்

சுவாமி! முன்பொருகால் நம் நாட்டை யடுத்த நந்தவனத்தில் யானும் சாலவபுரி சத்தியவந்தரு மெதிர்ப்பட்டு இருபேரும்மணஞ்செய்துகொள்வதாய்உறுதி கூறிக்கொண்டோம்.

நார:—(தலையசைத்துக்கொண்டே) அப்படியா! மகா பாக்யம்! மகாபாக்யம்! (அசுவபதியை நோக்கி)

ஸ்ரீ ராம பாதம—என்ற மெட்டு

பல்லவி

மன்னுமாபாக்யமே மாதிவள் வாக்யமே
மாண்சத்ய வான்சிலாக் யமே (மன்)

வசனம்

வேந்தே! நின் புத்திரி கோரியிருக்கும் வரனுனது முற்றிலும் அவளுக்குப் பொருத்த மானது பேஷ்! பேஷ்! மிகவும் நல்ல வரன்; ஆ ஹா!

அநுபல்லவி

முன்னோர் செய் புண்யமே மூண்டதிவ்வண்ணமே
மூதறிஞரோதுபுகழ் சாதவன்காருண்யமே (முன்)

வசனம்

ஆஹா! அரசே! அந்தச்சத்தியவான் பெருமையைக் கூற வென்றால் கொஞ்சமல்ல. சொன்னசொல்தவறாத சத்திய வான்! சுத்த வீரன்! புத்திசாலி! சற்புத்திரன்! சாமர்த்திய வான்! சுந்தரன்! கல்விக்கடல்களெல்லாம் அவன் இருதயத்தில் தான் தங்குகின்றன. சபாஷ்! நின்புத்திரி அவனைக்கோர நே ரிட்டதானது உம்முன்னோர்கள் செய்த பெரும் புண்ணியப் பயனன்றி வேறல்ல. எல்லாம் சரி; ஆனால் (மௌனம்)

அச:—சுவாமி! என்ன? ஒன்றும் பேசாதிருக்கிறீர்களே! ஆனால் என்று நிறுத்திவிட்டீர்களே! தங்கள்முகாரவிந்தமும்திடீரென மாறுதலடைந்து விட்டதே! யாது காரணம்? தயை செய்து சொல்லுங்கள்.

நார:—வேந்தே! யான் என்னவென்று சொல்லுவேன்

பாட்டு

சரணம்

நன்னகருடனே நயனமுமிழந்த
அன்னைபிதாவுட னடவியிலுறைந்து
இன்னலேமிகுந்து இலைகனியருந்தி
எதுமாதரவிலாத நாதைபோன்றதறிந்து

பல்லவியெடுப்பு

என்னவென்றோதுவேன்

வசனம்

அரசே! சத்தியவானின் தாய்தந்தையர் பகைவர்களால் விழிகளையும் இராச்சியத்தையுமிழந்து காட்டில் திரிகிறார்கள் இவனும் அவர்களுடன் துறவிகளோடு துறவிபோன்று இலை

காய் கனி முதலியவற்றைப்புசித்துக் காலந்தள்ளுகிறான். அவ்வாறிருக்க அவனுக்கு எவ்விதம் நின்செல்வத்திருமகளை மணஞ் செய்துகொடுப்பது? இது தான் இயக்கத்திற்குக் காரணம் வேறென்ன?

மால:—சுவாமி! நன்கு தெரிவித்தீர்கள்! அவர்கள் எவ்விதம்இருந்தாலுமென்ன? மணமுடிந்ததும் அனைவரையும்நம் இராச்சியத்திலேயே வைத்துக் கொள்ளலாமே!

நார:—(அசுவபதியைப் பார்த்து) வேந்தே! மாலவிசொல்வதும்உண்மைதான்; நல்ல யோசனையே; ஆனல்

பாட்டு

பல்லவி

என்னவென்றோதுவேன் இன்னுமோர் காரணம்
ஈதெவ ராலுமாமோ (என்)

வசனம்

இன்னுமோர் பெருங்குறை இருக்கிறதே! அஃதுயாவராலும் நிவர்த்திக்கமுடியாததே! அதற்கென் செய்வது? ஆ! அவனுக்கு எல்லாவற்றையும் அளித்தவர் அஃதொன்றை மாத்திரம் அளிக்க மறந்துவிட்டார்போலும்! யான் மாத்திரம் அத்தொழிலில்அமர்ந்திருந்தால்குறைந்தது இருநூற்றைம்பது வருடங்களாவதுஉயிருடனிருக்கும்படியாகச்செய்திருப்பேன்

அசு:—(மனந்திகைத்து) சுவாமி என்ன? தாங்கள் சொல்வது விளங்கவில்லையே! யாரைப்பற்றிச் சிந்திக்கிறீர்கள்?

நார:— அநுபல்லவி

அண்ணலே சத்யவான் ஆயுளமைப்பதே
ஆறிரண்டு திங்களெனக் கூறிடலாமற்பமே

வசனம்

வேந்தே! சத்தியவானின் ஆயுள் முடிவடைவதற்கு இன்னும் ஒரே வருடந்தான் இருக்கிறது.

[சாவித்திரி ஆவெனக்கதறிவிழுந்து மூர்ச்சை யடைகிருள்.]

மாலவி:—(மூர்ச்சை தெளிவித்துக் கொண்டே) ஆ! கடவுளே! நம் புத்திரிக்கு இவ்வாருய அவதியாநேரிடவேண்டும்? சாவித்திரி! சாவித்திரி!

சாவி:—(மூர்ச்சை தெளிந்தெழுந்து) ஐயோ! யான் இனி என் செய்வேன்! ஆ! என்மனம்துடிக்கிறதே! உடல்பதைக்கிறதே! ஆ! நாதா

[கண்ணீர் பெருகுகின்றது]

மாலவி:—கண்மணி! ஏன் கலங்குகின்றனை

புண்ணியம் போல் பாவம் மனமே—என்ற மெட்டு

பல்லவி

கண்மணி யேகலங்காதே—முனி
கழறியதிருவருள் மொழிதவருதே (கண்)

அநுபல்லவி

உண்மைக்கியைவதன்றே உத்தமப்பாக்யம்
உடலுயிர்போல் வரனை யடைதல்சிலாக்யம் (கண்)

சரணம்

கருதியவரனவன் கதிதனையறிந்தாய்
கண்ணிருந்துங்கிணற்றில் கவிழ்வதோகுழந்தாய்
உருகுமுன்னுள்ளத்தில்மற் ருெருவரனினைந்தால்
உத்தமமே முடிக்கச் சித்தமேதிடந்தான் (கண்)

வசனம்

என் கண்ணே! ஏன் தயங்குகின்றனை? நீ முன்கருதின வரனின் கதி இன்னதெனத் தெரிந்துவிட்டதாதலின் வேறு நல்ல வரனென்றைத் தெரிவிப்பாயம்மா. உடனே முடித்து வைக்கிறேம்.

சாவி:—அம்மா! யாதுவார்த்தை தெரிவித்தீர்கள். அரச வம்ஸத்தில் ஸ்திரீயாய் உற்பவித்த தாங்களே இவ்விதம் சொல்லப்புகுந்துவிடின் உலகத்தில் "கற்பு" என்னும் ஆபரணத்தைக் காத்துக் கொள்ள வேறு யார்தான் முன்வரப்போகின்றார்கள்? அன்றியும் "தற்காத்துத் தற்கொண்டாற்பேணித்தகைசான்ற-சொற்காத்

அச் சோர்விலாள் பெண்" என்னும் வாக்கியத்தில் பெண்க ளிடத்துத் தோன்ற வேண்டிய நற் செய்கைகள் யாவற்றினும் கற்பே முதன்மையானதென்பதை வற்புறுத்த வன்றோ முத லில் "தன்னைக் கற்பினின்றும் காத்துக்கொண்டு" என்று பொருள்படும் வாக்கியத்தை யமைத்திருக்கிறார் நாயனார். அதுவுமிருக்க

பாட்டு

ஷை பல்லவி.

அம்மணி யேசொல்வேனடியாள் — அய
னவனமைத் ததைத்தள்ள எவராலு முடியா (தம்)

அநுபல்லவி.

உம்முயர் தவத்தினா லுற்பவித்தேனே
உறுதியா யோர்வரனைக் கருதினேனானே (அம்)

சரணம்.

கற்புடைய மங்கையர்க்குக் கணவனோ ஒருவன்
கனவிலும் நனவிலுங் கருதார் மற்றொருவன்
விற்பனனேனுங் கொள்ள விளம்பாது தருமம்
விலைமடந்தை கட்கன்றோ பலபல புருடன் (அம்)

வசனம்.

அம்மா! அன்று பிரமதேவன் எழுதியதை யழித்து வேறு எழுதப்போவதில்லை. யான் எண்ணிய வரனின் கதி என்னவா யினும் சரி. அதனால் என்னதான் கஷ்டங்கள் நேரிடினும் "தாந்தாமுன் செய்தவினை தாமேயநுபவிப்பார்" என்றபடி யான் அநுபவிக்கக் காத்திருக்கிறேன். கற்புடைய பெண் ஒரு வனைக் கணவனென எப்பொழுது மனதில் நினைத்துவிட்டா ளோ அப்பொழுதே அவனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டாள். பின்பு வேறொரு கணவனைப்பற்றிச் சிந்தித்தாளெனினும் அவ ளின் கற்புக்கழிவு ஏற்பட்டுவிடும். ஆதலின் தாங்கள் கலங்க வேண்டாம். "முனீஸ்வரரின் வாக்குப் பிசகாது" என் றுரைத்தீர்கள். அதுவே எனக்கும் வேண்டியது.

[நாரதனையணுகி]

சுவாமி! தங்களைப்போன்ற தவரிஷிகளின் வாக்குப் பொய்க்கா தெனச் சொல்வதுண்மைதானே?

நார:—ஆம்! அதற்கேது தடை? வாஸ்தவந்தான்!

சாவி:—அப்படியாயின் சத்தியவானுக்கு என்னை மணஞ்செய்து கொடுக்க ஏன் தயங்குகிறீர்கள்?

நார:—சாவித்திரி! நானா தயங்குகின்றேன்? எனக்கொன்றும் ஆக்ஷேபணையில்லை. பின்னால் நீயன்றோ கஷ்டப்படப் போகின்றாய்.

சாவி:—இதென்ன விந்தை! தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்ற யான் என்ன கஷ்டப்படப்போகின்றேன்? என்னைச் சோதிக்கிறீர்களா?

நார:—(சற்று ஆலோசித்து) எனவ்விதம் சொல்லுகிறாய்?

சாவி:—யான் தங்களை நமஸ்கரித்தபொழுது என்னை எவ்விதம் தாங்கள் ஆசீர்வதித்தீர்கள்?

நார:—(மூக்கில் விரலை வைத்து)

பாலும்கே நாகரா என்ற மெட்டு.

பல்லவி.

மாபாக்யசாலியே மாபாக்யசாலியே
மன்னனுடன் வாழ்வாய் நீடூழியே (மா)

வசனம்.

சாவித்திரி! சபாஷ்! சபாஷ்! உன்னை மெச்சினேன். நீயே புத்திசாலி! நீயே கற்புக்கரசி! நின் கற்பின் மகிமையால் என்னைக் கட்டுப்படுத்திவிட்டாய். உன்னை ஆசீர்வதித்ததின் பலனாக நீ அநுபவிக்கவேண்டியிருக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டியவன் நானாயிருக்கிறேன். இருக்கட்டும் (சாவித்திரியின் காதில் ஏதோ உரைத்துவிட்டு)

அநுபல்லவி.

சாபமுமுன்செய்த பாபவிமோசனம்
சாருங்காயத்ரிசெப சாசனம் (மா)

வசனம்.

நான் இப்பொழுது உரைத்த காயத்திரி மந்திரத்தின் மகிமை இன்னதெனச் சொல்லுகிறேன் கேள். இம்மந்திரமானது நின் காதில் விழுந்த க்ஷணமே நீ இதற்குமுன் செய்திருந்த பாபங்களும் பெற்றிருந்த சாபங்களும் நாசமாயின. இனி உன்னிஷ்டப்படியே சத்தியவானை மணந்துகொள். ஆனால் இன்னும் ஒருவருடம் வரை இம்மகா மந்திரத்தை மறவாதுச் சரித்து ஆண்டு முடிவின்முன் மூன்று நாட்கள் சாட்சாத் காயத்திரி தேவியின்பேரில் நோன்புகொண்டு உபவாசமிருந்து உன் பர்த்தாவைவிட்டு க்ஷணநேரமும் பிரியாதிரு. அவ்விதம் செய்தால்

பாட்டு

சரணம்.

சத்தியவானுவி பற்ற ஏமன்மேவி
நத்திடிலன்னைகா யத்ரி துணையாவாள் (மா)

வசனம்.

தெரிந்ததா? ஞாபகமிருக்கட்டும்; மறந்துவிடாதே! (அசுவபதியை நோக்கி) அரசே மனதில். யாதொரு கலவரமுமின்றிச் சாவித்திரியைச் சத்தியவானுக்கே மணம் செய்துகொடு. அதனால் யாதொரு தோஷமுமேற்படாது. யான் சென்றுவருகின்றேன்.

அசு
மால } :—அப்படியே; மகாபாக்யம் சுவாமி! சென்று வாருங்கள்.
சாவி

[நமஸ்கரிக்கின்றனர். நாரதர் செல்கின்றார். கல்யாணத்திற்கு வேண்டியவற்றைத்தயாரித்துக்கொண்டு யாவரும் புறப்படுகின்றனர்.]

அங்கம் 6. 1வது சீன்.

கானகம்; த்யுமத்ஸேனரின் ஆஸ்ரமம்.

சத்தியவான் கனிபறிக்கச்சென்றிருக்கிறான்.

[அசுவபதி முதலானோர் படைகள் சூழவந்திறங்குகின்றனர். மாடவ்யன் ஆச்சரியப்படுகிறான்]

அசுவபதி முதலானோர் :—த்யுமத்ஸேன அரசே நமஸ்கரிக்கின்றோம்.

த்யு:—(நமஸ்கரித்து) கல்யாண்! தாங்கள் யார் தெரியவில்லையே!

அசு:—நான் பத்ராபுரிக்கிறைவனான அசுவபதி

த்யு:—ஆ! அப்படியா! (மாடவ்யனை விளித்து) மாடவ்யா! இவர்கட்கெல்லாம் ஆசனங்களைக் கொண்டுவந்து விரி. அமருங்கள்! அமருங்கள்! யாவரும் க்ஷேமந்தானே?

அசு:—கடவுள் கிருபையால் க்ஷேமமே!

த்யு:—சந்தோஷம்; யாது காரணம்பற்றி எளியேனை நாடிவந்தீர்கள்?

அசு:—அரசே! தங்கள் செல்வக் குமாரரெங்கே? அன்னவருக்கு என் குமாரத்தி சாவித்திரியை மணம் செய்து கொடுக்கவென் றிங்கடைந்தோம்.

த்யு:—ஆ! கடவுளே! (விசனிக்கின்றான். சற்றுநேரங்கழித்து) அசுவபதி யரசே! இதென்ன புதுமை! தற்போது யானிருக்கும் நிலைமை என்ன? தங்களின் உன்னத பதவி என்ன? தங்கள் புத்திரியை மணந்துகொள்வதற்கு என் புத்திரன் அருகதையுடையவனல்லவே!

அசு:—வேந்தே! அவ்வாறு சொல்லவேண்டாம் "செல்வம் சகடக்கால் போலவரும்" என்பது பழமொழி. தாங்கள் மறுபடியும் அரசைக்கைக்கொள்ள அதிக நாட்கள் சென்று விடாது அதைப்பற்றித் தாங்கள் ஒன்றும் சிந்திக்கவேண்டாம், என்

மகள் தங்கள் புத்திரனை மணந்தாலல்லது உயிர் தரியே னெனச் சபதம் கூறுகிறாள்.

தயு:—(அதிசயித்து) சாவித்திரி! இஃதென்ன பேதமை? பெண்ணாய்ப் பிறந்த உனக்கிவ்வளவு பிடிவாதங் கூடுமா? பெற்றோர் சொற்படி நடப்பதைவிட்டு கேவலம் காட்டில் கதியின்றித் திரியும் என் குமாரனைத்தான் மணந்து கொள்வேனென்றுரைப்பானேன்?

சாவி:—(கண்ணீர் விட்டுத் துக்கித்து) எனதன்புள்ள மாமனாரே! எல்லாந் தெரிந்த தாங்களே இவ்வாறு கூறின் இவ்வுலகம் ஏற்குமோ? மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தமே யாயினும் நடுவுநிலையற்ற பேதையர் போன்று செய்யத்தகாத வொன்றைச் செய்யுமாறு தூண்டின் அதற்கிணங்குதல் தருமசம்மத மல்லவே! யான் இப்போது தரித்திருக்கும் உயிரும் உடலும் தங்கள் குமாரரால் சில நாட்களுக்கு முன் நம் நாட்டையடுத்த சோலையில் ஆபத்தினின்றும் காப்பாற்றப் பெற்றவை யாதலின் அன்றுமுதல் அவ்விரண்டும் அவருடையதே! அன்றுதினமே யான் அவருக்கடிமை யாகினேன். அன்றுதினமே அவரை மணந்துகொள்வதாகத் தீர்மானித்துவிட்டேன். அவரும் சம்மதித்துவிட்டார். நான் இனிமேல்தான் தங்களுக்கு மருமகளாகப்போவதாக நினைக்கவேண்டாம். அன்றுமுதல் நான் தங்களுடைய மருமகளே. இனி யாவருமறிய விவாகம் நடைபெற வேண்டியதுதான் பாக்கி.

[சாவித்திரியின் உற்சாகமான மொழிகளைக்கேட்டு யாவரும் அதிசயமடைகின்றனர்.]

மாட:—(சந்தோஷத்துடன்) மகாராஜ்! இந்த அம்மாள் சொல்வது வாஸ்தவம்தான். எனக்கும் தெரியும். இதோ சென்று இளவரசரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்.

[ஓடுகிறான்]

———

அங்கம் 6. 2-வது சீன்.

காானகம்; மரங்கள் செறிந்த சாலே.

[சத்தியவான் கனிகளைப் பறிக்கிருன். திடீரென எங்கும் சாவித்திரியின் உருவம் அவன் கண்களுக்குத் தோற்றுகின்றது.]

சத்:—(திடுக்கிட்டு) ஆ! சாவித்திரி! என் ஆருயிரே! என் கண்ணே! என் செல்வமே! யான்தான் உன்னைக் கூடியசீக்கிரத்தில் அங்கு வந்து மணந்து கொள்வதாய் உறுதி கூறி வந்தேனே! யான் உன்னை மறந்திருப்பேனென்று இதற்குள்ளாக யானிருக்கு மிடந்தேடி ஓடிவந்துவிட்டாய்!

திருமால் மருகா என்ற மெட்டு.

பல்லவி.

மயிலே குயிலே யான்
மறவே னடியுனையே மட (மயி)

வசனம்

அடி மயிலைப்போன்ற சாயலையுடையவளே! குயிலைப்போன்ற குரலையுடையவளே! அன்னத்தைப்போன்ற நடையையுடையவளே! யான் உன்னை மறந்து விடுவேனென ஒருக்காலும் நினைக்காதே. யான் உனக்குச் செய்து கொடுத்த சத்தியமானது என்

அநுபல்லவி

மனத்திலடிக்கடி நினைப்பை யுறுத்துது (மயி)

வசனம்

மனதில் அடிக்கடி உன் நினைப்பை யூட்டுகிறதன்றி

சரணம்

மலர்வனந்தனிலிரு வருமெதிர் நாடி
மணம்புரிந்திடுவென மனமிசை நீடி
பலபல மொழிகளைப் பகர்ந்ததும் தேடி
பசபசப்பென் தென்துணை வாய்பிரிந்ததுங்கூடி (மயி)

வசனம்.

யான் மணிபுரத்தினின்றும் புறப்பட்டது முதல் வனத்தில் உன்னைவிட்டுப்பிரிந்ததுவரை ஒவ்வொரு விர்த்தாந்தத்தையும் மனத்தின்கண்ணே எடுத்துரைத்து சீக்கிரமாகச் சென்று உன்னை மணந்துகொள்ளும்படி தூண்டுகின்றது. ஆயினும் ஆ! என் காதற்கிளியே! யான் என்னவென்று சொல்லப்போகிறேன். நல்லவேளையாய் உன்னிடம் "இத்தனை நாட்களில்" என்று கெடுவு சொல்லாமல் "கூடிய சீக்கிரம்" என்று சொல்லிவந்தேனுதலால் நான் சத்தியவானுகினேன். இன்றேல் என் பெயருக்கழிவேற்பட்டிருக்கும். அதற்குக் காரணம் என்னையோவெனின்

பாட்டு

நினைப்பிரிந்தெனது	நகர்க்குறுவழியில்
வனத்திலனை பிதா	தனைக்கண்டகமிசை
ஜெனித்ததுயர்தனைச்	சகித்திடமுடியா
துனைத்ததிகருதித்	தனித்து நின்றனன் (மயி)

வசனம்

உன்னைவிட்டுப்பிரிந்து எனது நாட்டை நோக்கி வருங்கால் கானகத்தில் எனது தாய்தந்தையர் விழிகளையிழந்து யாதொரு ஆதரவுமின்றிக் கதறிக்கொண்டிருந்ததைக் கண்டு ஆ! கண்ணே! சாவித்ரி! அப்போது எனக்கு ஏற்பட்ட துயரத்தினுல் ஒன்றும் தோன்றவில்லை. அதுமுதல் பெற்றோரிடமிருக்குங்கால் அவர்கட்காக வருந்துவதும் தனித்திருக்கையில் உன்னை நினைந்து கவலுறுவதும் எனக்குச் சகஜமாயிற்று. அடி! பெண்ணே! நீ ஊர்செல். எப்பொழுது நம்மிருவரையும் கூட்டிவைக்கக் கடவுள் சித்தமோ அன்று தினம் கட்டாயம் உன் ஊர் வந்து சேருவேன். என்னிடம் வேறுவிதமான சந்தேகம் ஒன்றையும் வைத்துவிடவேண்டாம். நான் தாய்தந்தையர்க்குக் கனி முதலியவைகளைக் கொண்டுசெல்லவேண்டும். நான்வந்து

அதிக நேரமாகிறது. அன்னவர்களும் என் வரவை எதிர்பார்த்திருப்பார்கள்.

[சாவித்திரி யென நினைத்து, மரத்தையும் கனிகளையும் முத்தமிடுகிறான். இதுகாறும் மர மறைவில் நின்று இவைகளைக்கவனித்த பாடவ்யன் கிழப் பிராமணன்போல் வேடங்கொண்டு கையில் தடியுடன் வருகிறான்.]

கிழ:—(சத்தியவான்பேரில் வேண்டுமென்றே போய்விழுந்து) இதேதடா சனியன்! சுபகாரியத்திற்குப் போகும்போது தடை செய்வது?

சத்:—(வழியை மறித்துக்கொண்டு) சுவாமி! மன்னிக்கவேண்டும் எங்கு செல்கிறீர்கள்?

கிழ:—நான் எங்கேபோனாலும் நோக்கென்ன? வழிவிடு நேரமாறது.

சத்:—சுவாமி! அப்படிச் சொல்லக்கூடாது! சுபகாரிய மென்றீர்களே! எந்தச் சுபகாரியம்?

கிழ:—ஒரு மாங்கல்யதாரணம். கெடுதவறப்போறது. பூரிவாங்கணும். வழிவிடு. போறேன்.

சத்:—சுவாமி! அவசரப்படவேண்டாம்! எவ்வளவு பூரியாயினும் நான் தருகிறேன். யார்யாருக்கு விவாகம்?

கிழ:—பெண் சாவித்திரி.

சத்:—(ஆச்சரியப்பட்டு) சாவித்திரியா? எந்த சாவித்திரி?

கிழ:—எத்தனை சாவித்திரிகள் இருக்கிறார்கள்? மத்ராபுரி அரசகுமாரி!

சத்:—(மிகவும் அதிசயித்து) அப்படியானால் மாப்பிள்ளை?

கிழ:—மாப்பிள்ளை தான் இன்னாரெனத் தெரியவில்லை. முதலில் யாரையோ நினைத்திருந்தார்களாம்.

சத்:—சத்தியவானு?

கிழ:—ஆமாம்! சத்தியவான். இப்பொழுது யாரோ ஒருவன்.

சத்:—என் சத்தியவான் என்ன?

கிழ:—அவன் தான் தவமுதலியன செய்து மாண்டுவிட்டானுமே?

சத்:—(கிழவனை ஒருதள்ளுதள்ளி) ஏ கிழட்டுப்பிணமே! பிழைத்திருப்பவனை மாண்டுவிட்டதாகச் சொல்லலாமா?

கிழ:—(ஆச்சரியத்தோடு தடியைக்கீழே எறிந்துவிட்டு) என்ன பிழைத்திருக்கிறானு? எங்கிருக்கிறான்?

சத்:—இங்குதான் இருக்கிறான். என்னுடைய தோழன் தான்?

கிழ:—(வேடத்தைக் கலைத்துவிட்டு) உன்னுடைய தோழன் நானல்லவோ? நானெவ்விதம் சத்தியவானுவேன்?

சத்:—(திடுக்கிட்டு) மாடவ்யா! நீயுமா என்னைப் பரிகாசம் செய்ய வேண்டும்?

மாட:—இளவரசே! பேஷ்! நல்லகாரியம் செய்தீர்! பெற்றோர்க்கென கனிவர்க்கங்களைக் கொண்டுவருவதாய்ச் சொல்லிவந்து யாருமில்லாத சாலையில் கன்னியை நினைத்துப் புலம்புகிறீரே! இது உமக்குத்தகுமா?

சத்:—(ஆச்சரியப்பட்டவன்போல் அபிநயித்து) மாடவ்யா! என்ன! கன்னியா? இன்னுமா என்னுடன் விளையாடுகின்றாய்?

மாட:—அல்ல; அல்ல. நான் விளையாடவில்லை. தாம்தான் விளையாடுகின்றீர்.

[மயிலே குயிலே என்னும் பாடலைப்பாடி மரத்தையும் சத்தியவானையும் முத்தமிடுகிறான்.]

சத்:—(தனக்குள்) அந்தோ இவன் ஒளிந்திருந்து எல்லாவற்றையும் கவனித்தான்போலும்; இனி இவனிடம் ஒளிப்பதில் பிர

யோஜனமில்லை (பகிரங்கமாக) மாடவ்யா! நாமிருவரும் மணிபுரமிருந்து திரும்புங்கால் சிங்கத்தினின்றும் ஓர் பெண் மணியைக் காப்பாற்றினேனென்று சொன்னேனல்லவா? அன்னவள் என்னையே மணம்செய்துகொள்வதாய்த் தெரி வித்தாளாதலின் நானும் அதற்கிணங்கிக் கூடியசீக்கிரத்தில் மத்ராபுரிக்குச் சென்று அவளை மணஞ்செய்துகொள்வதாய் வாக்களித்திருந்தேன். இன்று கனிகளைப் பறித்துக்கொண் டிருக்கையில் திடீரென எங்கும் அன்னவளின் உருவமே தோன்றியதாதலின் அவளுக்குச் செய்துகொடுத்திருந்த வாக்கைக்கருதிப் புலம்பலானேன். வா செல்வோம்.

மாட:—இளவரசே! அவசரப்படவேண்டாம். அப்படியாயின் அவ் வம்மணியை மணஞ்செய்துகொள்ளத் தமக்குப் பிரியந் தானே?

சத்:—பிரியமில்லாமலா புலம்பியிருப்பேன்?

மா:—சரி, வாரும். மணஞ்செய்து வைக்கிறேன்.

சத்:—இதுவும் பரிகாசங்களிலொன்றோ?

மா:—அல்ல; அல்ல, வாஸ்தவமே.

சத்:—சாவித்திரி எங்கிருக்கிறாள்?

மா:—தம்மைத்தேடி அவ்வம்மையாரும் பந்துக்களும் விவாகத்திற் கு வேண்டிய ஏற்பாடுகள் சகிதம் வந்திருக்கிறார்கள்.

சத்:—சந்தோஷம்; வா செல்வோம்.

[இருவரும் சென்றபின் மங்களமாய் சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் மணமுடிகின்றது. அசுவபதி முதலாயினோர் சம்மந்திகளைத் தம் இராஜ்ஜியத்திற்கு அழைக்க அவர்கள் மறுக்கிறார்கள். சாவித்திரிக்கு வேண்டிய ஸ்ரீதனம்

முதலியவற்றைக் கொடுத்து ஆசி கூறிவிட்டு அசுவபதி முதலாயி ஞோர் ஊர் செல்கின்றனர். அன்று முதல் சாவித்திரி நாரதர் சொற் படி காயத்திரிமந்திரத்தை விடா து ஜெபித்து நாட்களைக் கணக் கிட்டுக்கொண்டுவருகிருள்.]

அங்கம் 6. 2—வது சீன் தொடர்ச்சி.

துயுமத்ஸேனர் ஆஸ்ரமம்.

[காலையில் சத்தியவான்சற்றுதூரத் தில் ஓர் மரத்தடியில் அமர்ந்திருக் கிருன்.]

சாவி:—(எதோ நினைத்துத்திடுக்கிட்டு) ஆ! நாரதமகாமுனிவர் திரு வாய்மலர்ந் தருளியபிரகாரம் ஸ்ரீ காயத்திரி தேவியின் நோன் பை இன்றுமுதலன்றோ அனுஷ்டிக்கவேண்டும்! இம் மூன்று நாட்களிலும் எனது நாதனைவிட்டு க்ஷணநேரமும் பிரியக்கூடா தெனச்சொல்லியுள்ளாரே! இதற்கென் செய்வது! தந்திரமாக எனது நாதனிடம் வரம் ஒன்றை வாங்கிக்கொள்கிறேன். [சத்தியவானிடம் செல்லுகிருள்]

சத்:—(சாவித்திரியின் முகம் மாறுபட்டிருப்பதைக்கண்டு துக் கித்து) கண்மணி! சற்று முன்பு சூரியனைக்கண்ட தாமரை போல் மலர்ந்திருந்த உன் முகமானது திடீரெனமாறுதலடைந் திருக்கிறதே! யாது காரணம்?

கல்யாணம் செய்துவையுமே என்ற மெட்டு.

பல்லவி.

சாவி:—மன்னு என் மனமகிழ்வே யுற
வரமொன்றை யருள்வீர் (மன்)

வசனம்

அரசே! சோர்ந்திருக்கும் என்முகமானது முன்னிருந்தது போலவே மலர்ச்சியுற வேண்டுமெனப் பிரியமிருப்பின் தாங்கள் தயைசெய்து எனக்கொருவரமளிக்க வேண்டும்.

சத்:—அடி என் பிரிய நாயகி! உன் முகம் சோர்வுற்றிருப்பதைப் பார்த்துச் சகித்திருப்பவன் யானு? உனக்கு வேண்டுவது

பாட்டு.

பல்லவி.

என்னவ ரமோகேள்மானே எனக்
கிசைந்தசெந் தேனே (என்)

வசனம்.

இன்னதெனத் தெரிவித்தால் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

சாவி:— அநுபல்லவி.

நன்னயமா யொரு நோன் பிணைமூன்று
நாட்கள்வரையில் யான் மேற் கொளவேண்டும்
சொன்னவந் நாளிலென் துணைவரே யாண்டும்
தோகையெனை விட்டெங்கு மேகுவதிலையென்று (மன்)

வசனம்.

எனதாவித் துணைவரே! ஓர் மகான் எனக்கு உபதேசித்தபடி இன்றுமுதல் மூன்று தினங்கள்வரை சாட்சாத் காயத்திரி தேவியின்பேரில் நோன்புகொண்டு உபவாச மிருக்கவேண்டு மாதலால் அம் மூன்று நாட்களிலும் தாங்கள் என்னைவிட்டு க்ஷணநேரமும் பிரியக்கூடாது. இதைத்தான் யான் கேட்டுக் கொள்கிறேன்.

சத்:— அநுபல்லவி.

கன்னலின் ரசமொழிக் காரிகை நீயே
கருதியபடி தந்தேன் கவலொழிப்பாயே

உன்னியபடி நோன் பியற்றிடுவாயே
உத்தமியே தருவே னெத்தனையேனு மினு(மென்)

வசனம்

கரும்பிரசத்தை யொத்த வாக்கைக்கொண்ட உத்தமப் பெண்ணே! நீ விரும்பியவாறே வரம் அளித்தேன். கவலைவிடுத்து உன் மனோபீஷ்டப்பிரகாரம் நோன்பிருப்பாயாக. இன்னும் ஏதேனும் தேவையாயின் கேள்.

சாவி:—நாதா! யான் வேண்டியதைப் பெற்றுக்கொண்டேன். என் அகம் குளிர்ந்து விட்டது. யான் சென்று வேலைகளைக் கவனிக்கிறேன்.

[சாவித்திரி செல்லுகிறாள். நாட்களிரண்டு கழிந்தன. மூன்றுநாட் காலையில்]

சத்:—(சாவித்திரியை அணுகி)

மதீனமே மோரே சையா என்ற மெட்டு.

பல்லவி

தாவுமயிலே என் கண்ணே சாவித்ரியே
கண்ணே சாவித்ரியே (தா)

அநுபல்லவி

காவினிற்சென்று கனிவர்க்கங்கொண்டு
கடுகிவருவேனினி விடைதருவாய் (தா)

தொகையரா.

மண்ணிழந் தென்றந்தை யன்னையருடனுமிம்
மாவனந் தனை யடைந்தே
கண்ணிழந்ததை யெண்ணி மனமெலிந்தாரெந்தன்
காதனீ யருகிருந்தே

அநுபல்லவி எடுப்பு.

எண்ணியவெண்ணம் இயற்றுவாய்திண்ணம்
இதமுறு மதியுயர் ஏந்திழையே (தா)

வசனம்.

அடி என் ஆருயிர்க்காதலி! நான்கைந்து நாட்களுக்கு முன்னம் கொண்டுவந்த காய், கனி, விறகு முதலிய யாவும் செலவாகிவிட்டன. இன்றைக் காரியத்திற்கு வேண்டியவைகளை யான்சென்று சேகரித்துவருகிறேன். நீ நின் மாமன் மாமியார்களோடு வழக்கம்போல் உபசரித்துக்கொண்டிரு. இதோ சீக்கிரம் வந்துவிடுகிறேன்.

சாவி:—நாதா! யாதுவார்த்தை புகன்றீர்கள்! மூன்று நாட்கள்வரை என்னைவிட்டு க்ஷணமும் பிரியக்கூடாதெனக் கேட்டதற்கு ஆகட்டுமென வாக்களித்தீர்களே! இரண்டு நாட்கள் தானே ஆகியிருக்கின்றன! தாங்கள் சொல்லியதுபோல் இன்றைக்கு வேண்டியவைகளைச் சேகரிக்கவேண்டியது வாஸ்தவந்தான். ஆதலால் யானும் தங்களுடன்வருகிறேன் வாருங்கள்.

சத்:—அடி பேதாய்! "பேதமையென்பது மாதர்க்கணிகல" னென்பதை உன்னிடத்தில்தான் நிதரிசனமாகக் கண்டேன். மகா பராக்கிரமமுள்ள ஆடவர்களும் செல்லற்கஞ்சும்படியான காட்டிற்கு ஒன்று மறியாத நீ வருகிறேனென்பது விந்தையே. வேண்டாம்; யான் சொல்வதைக்கேள்; இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்.

சாவி:—நாதா "இளங்கன்று பயமறியா" தெனினும் தன் உயிரைப்போல் பாதுகாப்பதற்குத் தாய் அருகிலிருக்கும் பொழுது அதற்குக்குறையேது? அதுபோல் தாங்களும் கூட்வருவதால் யான் ஏன் பயப்படவேண்டும்? அன்றியும் தங்களை மணந்தது முதல் நமது ஆஸ்ரமத்தையன்றி வேறொன்றையும் யான் கண்

டிலேன். இன்று என திருகண்களும் குளிரும்படி இக்கானகக் காட்சிகளைக் காண்பேனாயின் யான்கொண்டிருக்கும் நோன் பினாலேற்பட்டபசிக்களைப்பும் தோற்றாது. ஆதலின் மறுக்காது என்னையும் தங்களுடன் அழைத்தேகவேண்டும்.

சத்:—சாவித்திரி! நீ சொல்வதும் உண்மையே! மனக்கலக்கங்கொள் ளாது வா. என் தாய் தந்தையரிடம் விடைபெற்றுச் செல் வோம்.

[விடை பெற்றுக்கொண்டு இருவ ரும் கானகத்தில் வெகுதூரம் வரை அதன் காட்சிகளைக் கண்ணு ற்றுக்கொண்டே செல்கின்றனர்]

சத்:—ஆ! யாது காரியம் செய்தேன். நாம் வந்த காரியத்தைக் கவ னியாது நம் கண்களுக்கு இன்பத்தை விளைவித்துக்கொண்டே வெகுதூரம் வரை சூரிய கிரஹணங்களைக் காணமுடியாத இந்தக்

கட்டி முத்தமிட்டிட என்ற மெட்டு.

காட்டினுன்னைக்கூட்டிவந்தேன் கண்ணே சாவித்திரி

சாவி:—வீண்—வாட்டமேனோ,தாட்டிகஞ்சேர் மன்னா நம்மகத்தில்

சத்:— காடிபுலி கரிகளை நீ கண்டாற் கலங்குவையே

சாவி:—என்—நாதனாயிங் கேதும் வாராது காப்பாரரன் துரையே

வசனம்.

சத்:—சாவித்திரி! இக்காட்டில் வசிக்கக்கூடிய கொடிய மிருகங் களைக்கண்டால் நீ பயப்படுவாயல்லவா?

சாவி:—நாதா! அவ்வாறொன்றும் ஏற்படாது. இனி காய் கனிகளைச் சேகரிப்போம்.

சத்:—சரி! நான் மரங்களிலேறிக் கனிவர்க்கங்களையும் காய்ந்த குச் சிகளையும் போடுகிறேன். நீ எல்லாவற்றையும் ஒன்று சேர்த் துக்கொண்டிரு. [மரத்தில் ஏறுகிறான்]

அங்கம் 7. 1-வது சீன்.

வைவச் சுதபுரி (எமலோகம்)

[எமதருமர் வருகின்றார்]

தனத்த தத்தனனா என்ற சந்தம்

பல்லவி

அறத்தினுக்கிறைவன் உயி
ரணைத்தினுக்கதி பதிப்பெயர்க்கொளும் (அற)

அநுபல்லவி

திறத்துறும்எம தேவனான் சூலமும்
தெண்டம்பாசத்தினை கொண்டரசாட்சிசெய் (அற)

சரணம்

ஜெனித்துலாவிடு தேகவிரோதங்கள்
செய்திடு புண்ணிய பாவமே
இனப்படிவரைந் துரைத்திடல்கணக்கு
சித்ரகுத்ரனின்சு பாவமே
இணைத்தகனூதர்க ளேவல்புரிந்திட
இதாயிதம்மறிந்து விதானிதந்தண்டிக்கும் (அற)

[சிம்மாதனத்திலேறிநின்று முழு
முதற்கடவுளைத்தொழுதல்]

மாதுபாகமானவா என்ற மெட்டு.

வாசிவாபராபரா வாமிமனோகரா
மாமறையோதும காமேதவதற்பரா
மங்களாகராசதாசி வா தயாபரா
மதியுலவு நதிபரவ
கிதியுடையோ யிதுதியாள்
மஞ்சாருஞ்சடாதரா மான்மழுவேந்துங்கரா
வா கா வா வரோ கரா (வா)

[சிம்மாதனத்திலமர்கின்றார். தூதர்கள் நமஸ்கரிக்கின்றனர்]

வசனம்

எம:—அடே தூதர்காள்! அடாடாடாடா! எனக்கு முன் இங்கு இருக்கக்கூடிய கணக்கன் சித்திரகுத்திரன் ஏன் இப்பொழுது இங்கில்லை? அதிசீக்கிரம் சென்றழைத்துவாருங்கள்

[ஒருவன் செல்ல சித்திரகுத்திரன் வருதல்]

சித்:—மகாராஜ்! கணக்கு சித்திரகுத்திரன் நமஸ்கரிக்கின்றேன்

எம:—ஓய் சித்திரகுத்திரா! ஏன் இவ்வளவு தாமதம்?

சித்:—மகாராஜ்! இதற்குமுன் நமது தூதர்கள் கொண்டுவந்த ஜீவன்களில் பாபாத்துமாக்கள் சில, கணக்கிலடங்காத குற்றங்களைச் செய்திருந்தன. அவைகளைக் கணக்கிட்டுக்கொண்டுவரச்சற்று தாமதமாயிற்று.

175413

எம:— தத்த தத்தா என்ற சந்தம்.

பல்லவி

சித்ரகுத்ரா திடநனியுடைமதி (சித்)

அநுபல்லவி

ஜீவஜெந்துகளின் ஆயுட்கணக்கிடுஞ் (சித்)

வசனம்.

சித்திரகுத்திரா! அப்படியா! அடாடாடாடா! கணக்கிலடங்காத பாபச்செயல்களைச் செய்திருக்கின்றனவா!

சரணம்.

இத்தநியவ்வுயி ரெத்தனையாயினு
மேதிரக்கமின்றி தூதினத்தினைவிட்
டிழுத்துவா இகத்துச்செயல்களை
வழுத்துவாய் மகத்துத்தண்டனை
விதிக்கிறேன் கோலா
விடிக்கிலேன் மூதி

கொடிக்கிறேன் மனந்
திடுக்கிடக் கையால் அடிக்கிறேனடா (சித்)

வசனம்.

அவ்வுயிர்கள் எத்தனையாயினும் சற்றும் ஈவிரக்கம் பாராட்டாது நமது தூதர்களைவிட்டிழுத்துவந்து ஒவ்வொன்றும் செய்திருக்கும் பாபத்தொழில்களைத் தெரிவித்தால் அததற்குத் தகுந்த தண்டனை விதிக்கிறேன்.

[தூதர்கள் பாபாத்துமா ஒன்றை இழுத்துவருகின்றனர்]

சித்:—மகராஜ்! இதோ இச்சண்டாளன் இதற்குமுன் பூலோகத்தில் மானிடவர்க்கத்தில் நாகசாமிசெட்டி மகன் கிருஷ்ணசாமி செட்டியாகப் பிறந்து கொஞ்சம் படித்தும் மூடனுகிப்பிழைக்கவழிதெரியாமல்

பாட்டு.

கன்றுக்குப் பாலைவிடாமல் என்ற மெட்டு.

மெத்தப்படித்தோமென் பித்துப்பிடித்தேகர்
வித்துத்துடித்த வெறும்வித்துவான்
சித்தத்திடத்தோடு வெத்துப்படிப்பாளர்
புத்தித்திறத்தைப் புறங்கத்துவான்

வசனம்.

தான் கல்விக்கடலின் கரையைக் கண்டுவிட்டதாகவே நினைத்தகங்கரித்துப் படித்தோரை இகழ்வதும் பாமரரைக் கடவுளுக்குச் சமமாகப் புகழ்ந்து பணம் பறிப்பதும் கபடமற்றவர்களை வஞ்சிப்பதும் தொழிலாயிருந்தவன்.

எம:— அப்படியா! அடாடாடாடா! அடே தூதர்காள்!...

பாட்டு

பத்தியற்றுமடப் புத்தியுற்றுமுரண்
பாட்டை நாட்டிடுமிப் பாவியை
கத்திபிட்டுடலிற் குத்திவிட்டெரியிற்
காட்டிவாட்டிவதை செய்குவீர்

வசனம்.

இத்துணை அக்கிரமம்புரிந்த இச்சண்டாளனைக் கத்தியிற்குத்தி அக்கினியிலிட்டு வதைப்பதன்றியில்உங்களிஷ்டம்போல் இன்னும் எவ்வளவு வேண்டுமாயினும் இம்சியுங்கள்.

தூத:— அப்படியே! (பாபியைப்பிடித்துத்தள்ளுகின்றனர்)

பாபி:— (துக்கத்தோடு) பாட்டு.

ஆதிசரவண பவகுகனே என்ற மெட்டு.

பல்லவி.

ஏனோ இவ்விதச் சென்மமெடுத்தேன்
எம னுக்கினைக்குத் துடித்தேன் (ஏ)

அநு பல்லவி.

நானிலமுலவிய நாகையாசெட்டி
நல்கி வளர்த்திடக் கல்வியிற்கிட்டி
ஞானமிலாதலைந்தே னொருமட்டி
நம்பிக்கைமோசம் வம்புக்கென்வேஷம்
சம்பக்கைவீசும் பிசாசம் (ஏ)

வயிற்றுப்பிழைப்பிற்காக வாசம்பினைக்கடந்தேன்
வாக்கருமையிலாத போக்கிரிக்குடந்தை
இயற்றுமவனடத்தைக் கேற்பவேநடந்தேன்
ஏழையாய்ப்பூவில் பீழையால் மேவி
மோழைபோற்கூவ பாவி (ஏ)

நல்லறிவாளர்கள் நடுங்கவேதூற்றி
நாணயப்பெருமையை நன்குபாராட்டி
புல்லறிவாளரையும் புகழ்ந்தேனேமாற்றி
பூதகிவிலியார் மோகிசங்கிலியால்
வாதைதந்திடவே வீணில் (ஏ)

[தூதர்கள் தள்ளிக்கொண்டு சென்று வேறொரு பாபாத்துமாவை இழுத்து வருகின்றனர்.

சித்:— அரசே! இந்தச்சண்டாளன் ஆவணிபுரத்து இருளாண்டி மகன் கோபாலன்; முன்ஜென்மத்தில்

பாட்டு.

கொண்டமனைவிக்கி — ரண்டகஞ்செய்தயலி
முண்டையைக்கூடி — மருவினவன்
அண்டையயல் வாழ்வைக் — கண்டுபொருமைமேற்
கொண்டுதிரிந்த — கெருவியிவன்

வசனம்.

கொண்ட மனைவியிருக்க அல்வா பால்கோவாவிற் காசையுற்று அயல்வீட்டு முண்டையைக் கூடியும் பிறர்வாழப் பொருமல் அவர்களை நயவஞ்சகஞ்செய்தும் வந்தவன். அன்றியும்

பாட்டு

தனக்குபகாரப் — பிறர்க்கபகாரி
தனதல்லாச்சொத்தில் — மனமுற்றவன்
தனதெஜமானி — னினவிலாசங்கவர்ந்
தன்னம்பினோர்பாற் — குணமற்றவன்

வசனம்

இவனுக்கு, உபகாரஞ் செய்தவர்கட் கபகாரஞ்செய்வதும், அந்நியர்களுடைய சொத்தைத் தனதாக்கிக்கொள்ள வேண்டிய முயற்சியைத் தேடுவதும், தன் எஜமான் வர்த்தகத்தினினங்களைக்கைப்பற்றி எஜமானைக்கெடுப்பதும், தன்னையடைக்கலமென்று வந்தோரை அடிவயிற்றி லடிப்பதும், இனத்துரோகங் குருத்துரோக முதலியன செய்வதுமே தொழில். இவனுக்குத் தக்கதண்டனை விதிக்கவேண்டும் பிரபு!

எம:— அடாடாடா! இந்தச்சண்டாளன் கொடிய செய்கைகளையே தொழிலாகக் கொண்டலைந்தவன்! நல்லது!

பாட்டு

இக்கணத்திவனைச் — செக்கிலிட்டுடலில்
நெக்குவிட்டுதிரம் — பீறிட

சக்கையைக்கழுகு கொக்குகொத்தவிருந்
தொக்க வைத்திடன்பு மீறிட

வசனம்.

அடே தூதர்காள்! இச்சண்டாளனைக் கொண்டுபோய்ச் செக்கி லிட்டாட்டிக் கழுகுமுதலான பறவைக ளுண்ணும்படியாகச் சக்கையைப் பிழிந்தெடுத்தெறிவீர்களாக! சீக்கிரம்!

[தூதர்கள் பிடறியை நெட்டித் தள்ள கதறிக்கதறியழுது கொண்டே செல்கிறான்.]

பாபி:— ஐயா பழனிமலை வேலா என்றமெட்டு.

கண்ணிகள்.

ஐயோயினியென்செய்கு வேனே இதை
அந்நாளறிந்திடாது போனேன்
பொய்யான வாழ்வதனைத் தானே நம்பி
புறக்கணித்துறவு செற்றி னேனே (ஐயோ)
சையோகமணமக ளிருக்க அறு
தலியைநேசித்திருந்தேன் பெருக்க
வையகத்தயல்வாழ்வைச் சுருக்க பல
வஞ்சனைகள் செய்தேனகந் தருக்க (ஐயோ)
அன்னியர்பொருள்கட் காசை கொண்டு யான்
அளவிலாத் தின்மைசெய்த துண்டு
என்னையாட் கொண்டோர்க்கிதம் விண்டு அங்
கிசைத்ததெல்லா மகிதத் தொண்டு (ஐயோ)
நம்பினோர்கள் குடியைக் கெடுத்தேன் கெட்ட
நாணயக்கருவியாய் நடித்தேன்
என்போற் பாவியுண்டோ படிக்கே இந்த
மமதைக்கினைக்குடல் துடித்தேன் (ஐயோ)

[மற்றொருபாவியைத் தூதர்கள் கொண்டுவருகிறார்கள்]

சித்:— தருமதுரையே! இதோ வந்திருக்கிறவன்தான்

பாட்டு.

ஒட்டிக்கிரட்டியான வட்டிக்காசைப்பட்ட
மட்டியிவன்மகா துட்டனாகும்.
பட்டியாவின்பாலை யொட்டக்கறந்து நீர்
விட்டுக்கலந்துபின் விற்றோனாகும்

வசனம்.

ஒட்டிக்கிரட்டியாக எதிர்வட்டி போட்டுவாங்கிப் பெட்டியிற் போட்டிருப்புக்கட்டிப் பேய்போன்று காத்திருந்ததுமன்றி, கன்றுகட்குப் பால்விடாமல் ஒட்டக்கறந்து அப்பாலிலொன்றுக் கிரண்டுபங்கு தண்ணீரை விட்டுக்கலந்துவிற்றவன் முழிக்கிறான் பாருங்கள்!

எம:— ஆஹா! பசும்பாலில் நீரைவிட்டும் வட்டிக்கெதிர்வட்டி போட்டும் பணஞ்சம்பாதித்துக் காத்திருந்தவன்! அடாடா!

பாட்டு.

பட்டியாப்பாற்கி ரட்டியாய்நீரை
விட்டு வட்டிகொண்ட மட்டியை
நட்டதோர்கழுவி லிட்டுநாய் கழுகு
கொட்டுந்தேளினத்தைத் தட்டுவீர்

வசனம்.

அடே கிங்கிலியர்காள்! இப்பாதகனைக் கழுவிலேற்றிக் காக்கை கழுகு நாய்கள் பற்றியிழுக்கவும் நட்டுவக்காலி தேள்முதலிய விஷஜெந்துகள் கொட்டி இம்சிக்கும்படியாகவும் செய்யுங்கள்.

[தூதர்கள் பிடித்துத்தள்ள முன் செய்த கொடுமைகளை நினைந்தழுதுகொண்டே செல்கிறான்]

பாபி:— நந்த வனத்திலோ ராண்டி என்ற மெட்டு

கண்ணிகள்

என்னசெய்வேனினி நானே தனி
இங்காருந்துணையில்லை யேயாவியானேன்

முன்னமறியாது போனேன் ஆனால்
மூத்தோர்சொல் வார்த்தைகே ளாத்தன்மைதானே (என்)
கன்றுக்குப் பாலைவி டாமல் ஒட்டக்
கறந்துதண்ணீரைக் க லந்தேன்கூசாமல்
ஒன்றுக்கிருவட்டி போட்டேன் வழக்கில்
உள்ளதை யல்லவென் றுறுதியாய்க் கேட்டேன் (என்)
சண்டாள னென்னவே நண்ணி இந்தச்
சதிசெய்யவுரைத்திட்டகதிதனே யெண்ணி.
கண்டால் நடுங்குதென் மெய்யே எமா
காலதூத ரட்டகாசமு மையே (என்)

வசனம்

எம:— சித்திரகுத்திரா! இன்னும் எத்தனை இருக்கின்றன? தெரிவி சீக்கிரம்.

சித்:— மகராஜ்! இனி இருப்பவைகளெல்லாம் சில்லரைப் பாபாத்துமாக்கள்தான்; அவைகள் செய்திருக்கும் பாவங்களுக்கேற்றபடி நமது சட்டப்பிரகாரம் நானே தண்டனையிட்டு விடலாமென அபிப்பிராயப்படுகிறேன். தங்கள் சித்தம் எப்படியோ?

எம:— சரி, அவ்விதமே தவறாது செய்வாயாக. இனி புண்ணியாத்மாக்களைத் தருவி.

சித்:— அரசே! ஒரே ஒரு ஆத்துமாதான் உண்டு. இதோ தருவிக்கிறேன். [புண்ணியாத்துமாவருகிறான்]

புண் :— மற்றுப்பற்றெனை என்ற மெட்டு.

கண்ணிகள்.

மாதுபாகா நின் மாமலரடி-
யோதிடுந்தொண்ட னல்லவோ
சோதியாதெனை யாளுவாய்சோம
சுந்தரா வின்னுஞ் சொல்லவோ
பூதலத்துற்ற போதுயான்செய்த
புண்ணியங் கொஞ்ச மல்லையே

பாதகருறும் பாழெமலோகம்
பார்க்க வைத்தது தொல்லையே

வசனம்

ஆ! கருணாகரா! யான் பூவுலகின்கண் உதித்து என்சுய அறிவு தோன்றியது முதலாக ஒருபாவமுஞ் செய்தறியேனே! எத்தனையோ அன்னசாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் இன்னும் பலவிதமான தருமசாலைகளைக் கட்டித் தருமம்நடத்திவந்தேனே. அவ்வாறிருக்க, பெரும்பாதகர்கள் இருக்கும்படியான இவ்வெமலோகத்தை யான்பார்க்குமாறு வைத்தனையே தேவா! இதுவும் நின் சோதனையா?

எம:— ஹே புண்ணியபுருஷா! நீ சுயவறிவில்லாத சிறுபிராயத்தில் எத்தனையோ பாவத்தொழில்களைச் செய்திருக்கின்றனை. ஆயினும் அவையாவும் நின் பெற்றோர்க்குரித்தாய்விட்டன. பின்னால் நீ நடத்திவந்த அன்னதானச் சாலையொன்றில் ஓர்முறை வந்த அகதிகட்குச் சற்றுத்தாமதமாக அன்னமளித்தனை யாதவின் இம்மார்க்கமாக வரநேர்ந்தது. இதோ சுவர்க்கத்திற்குச் செல்லும்பாதை; சீக்கிரமாகச் செல்லும்.

புண்:— சுவாமி! நமஸ்காரம்; இதோ செல்கிறேன். [செல்கிறான்]

எம:— சித்திரகுத்திரா! இனிப் பிடித்துவரவேண்டிய உயிர்களின் கணக்கெங்கே?

சித்:— இதோ தயாராக வைத்திருக்கிறேன்.

[கணக்கைப்புரட்டுகிறான்]

மகராஜ்! பூலோகத்தின்கண் சாலவபுரியை ஆண்டிருந்து தற்பொழுது காட்டில் வாசஞ்செய்யும் தியுமத்ஸேனனின் புத்திரன் சத்தியவானின் உயிரைக் கவர்ந்துவரவேண்டும் அதுஒன்றுதான். [போகின்றான்]

எம:— பாட்டு.

நத்தமு கத்தா வாடா சிம்ம
ஊதவி யாதா வாடா
உத்தம சுந்தர சத்திய வந்தனி
னுயிர்கவ ரப்போ டா

வசனம்

அடே நத்தமுகத்துவியாதா! சீக்கிரமாகப் பூலோகத்திற்சென்று சத்தியவானைப் பிடித்துவா.

தூத:— மகாராஜா! இதோ செல்கிறேன். [நாரதர் வருகின்றார்]

நார:— மூத்திநெறியறியாத என்ற மெட்டு.

ராமஜெயம் ஹரி ராமஜெயம் ரகு
ராமஜெயம் ஸ்ரீ ராமஜெயம்
ராமஜெயம் ஹரி ராமஜெயம் ரகு
ராமஜெயம் ஸ்ரீ ராமஜெயம்

வசனம்

யாரடா தூதன்!

தூ:— யாரது இங்குவந்து அடாபுடா வெனப் பேசுகின்றது?

நார:— அடே! உமதாசனிடத்திற்சென்று நாரதர்வந்திருப்பதாகச் சொல்.

தூ:— சுவாமி! மன்னிக்கவேண்டும்; தெரியாமற் கேட்டுவிட்டேன்; (விழுந்து நமஸ்கரித்து) இதோ சென்று தெரிவிக்கிறேன்.

[எமதருமரிடம் சென்று]

மகாராஜா! நாரதமகாமுனிவர் வந்திருக்கிறார்.

எம:— அப்படியா! (சிம்மாதனத்தை விட்டெழுந்து நாரதரையனுகிரமஸ்கரித்து) நாரதமஹாமுனிவரே! வாரும்; வாரும்.

நார:—(பதில் நமஸ்காரம்செய்து) இதோ வருகிறேன்.

[இருவரும் அமருகின்றனர்].

எம:— முனிவரே! எது வைவச்சுதபுரிக்கு வழிதவறி வந்ததுபோல் வந்திருக்கிறீர். யாது விசேஷம்?

நார:— எமதருமா! அப்படியல்ல; உம்மைப்பார்த்து நெடுநாளாயிற்றே, இன்றைக்காவது பார்த்து ஏதேனும் வாங்கிக்கொண்டு போகலாம் என்று நினைத்தேதான் இங்கு வந்தேன். எல்லோரும் க்ஷேமந்தானே?

எம:—எல்லோரும் க்ஷேமந்தான். தம்மைப்போன்றவர்கள் எல்லாம் துணையாக விருக்கும்பொழுது எமக்கு என்ன குறைவு? அஃதிருக்கட்டும்; வாழைப்பழத்தில் ஊசியேற்றியதுபோல் பேச்சோடு பேச்சாக என்னிடமிருந்து எதையோ கொண்டு போகலா மென்று வந்ததாய்ச் சொன்னீரே என்ன?

நார:— ஏன்; நான் ஏதேனும் கேட்டால் நீர்தான் கொடுக்கமறுப்பீரா அல்லது நான்தான் பெறமாட்டேனு? ஒரு காரியமுண்டு.

எம:— சபாஷ்! நாம் நினைத்ததுபோலவே இருக்கிறது காரியமும்; காரணமில்லாமலா நாரதர் யாரையும் நாடுவார்? இருக்கட்டும்; யாது காரணம்?

நார:— விருத்தம்.

பொற்புறுமேம நின்பாற் புகல்வர மொன்றுவேண்டித்
தற்பொழுதிங்கடைந்தேன் தயைபுரிந்தருளல் வேண்டும்
கற்பெழில் மின்சாவித்ரி கணவன் சத்தியவான் மிக்க
சற்புத்ரனுகுமாயுள் தந்து நீ உதவுவாயே.

வசனம்.

எமதருமா! பூலோகத்தில் வசிக்கும் த்யுமத்ஸேனனின் புத்திரன் சத்தியவான் மிகவும் சற்புத்திரன்; அவன் பத்தினி சாவித்திரி மிகவும் கற்புடையவள்; சத்தியவானின் ஆயுள் முடிவடைந்துவிட்டதாகத் தெரிகிறது; தயைசெய்து இன்னுங் கொஞ்ச காலம் அவன் சாவித்திரியுடனிருந்து இல்லறம் நடத்துமாறு அருள்புரிய வேண்டும்.

எம:— பேஷ்! நினைத்தேன்! நினைத்தேன்!! நாரதமுனீஸ்வரரே! இது சமயம் கலகத்திற்கு வேறு இடமொன்றும் உமக்குக்கிடைக்கவில்லை போலும்! யாது வார்த்தை தெரிவித்தீர்! நீர் இப்பொழுது தெரிவித்த சத்தியவானலலாது இன்னும்

பாட்டு.

தானதந்ததன தானதந்ததன தானதந்ததன—தா என்ற சந்தம்.

கண்ணிகள்.

பாதலம் முதலீ ரேழ்தலங்களிடை
வாழ்தரும்பிறவி தான் பல
மாதவம் அரிய சாதனம்யழவி
யாதினும் புரியி னும்
தீதகன்ற சதுர் வேதமந்த்ரமிவை
யோதி யன்புபெறி னும் வெகு
சீத பங்கயசு யாதனன் எழுது
போதகன்று விடி லோ
தூதினங்களில் க தாதரன் படைவி
யாதனன் முதவி யோர் கள்
தேதினங்களில் வி டாது சென்றுபிடித்
தேதுயர்ந்து வரு வார்
ஆதி சங்கானி வீதியின் வழியி
ராத ஜெந்துகளென் ருல் எமக்
கோது சம்பிரம ரீதியின் படியு
பாதி தந்திடுவே னே.

வசனம்.

அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதலமெனச் சொல்லாநின்ற கீழேழுலகங்களிலும் பூலோக புவர்லோக சுவர்லோக மகர்லோக சனலோக தவலோக சத்தியலோகமா மேலேழுலகங்களிலும் பிறந்துழலும் ஜீவராசிகள் எப்பேர்ப் பெற்ற மகிமை வாய்ந்த தாயினும் நான்முகனிட்ட ஆயுள் முடிவடைந்துவிட்டக்ஷணமே அவைகளைப்பிடித்துவந்து ஒப் பிக்கவேண்டியது நம் தூதர்களின் கடமையும் அவைகள் செய்திருக்கும் புண்ணியபாவங்களுக் கேற்ப இரட்சித்தலும் சிட்சித்தலும் என்னுடைய கடமையும். இது விஷயத்தில் தவறமுடியாது; நீர் வீணாக இதில் தலையிட்டுக்கொள்ளாதீர்.

நார:— எமதருமா! நீர் இதுவரை சொல்லிவந்த விஷயமெல்லாம் எனக்கும் தெரிந்தவைதான். இது விஷயத்தில் தலையிட்டுக் கொள்ளக்கூடாதுதான். தலையிட்டுக்கொண்டபின் அதை நிறைவேற்றாதிருப்பது எனக்கழகல்ல. ஆதலின் தயைசெய்து கொஞ்சம் கருணை செய்யும்.

எம:— முனிவரே! நீர் சொல்வதைப் பார்த்தால் ஏதோ என்னைப் பரிகசிப்பதுபோல் தோன்றுகிறது. முழுமுதற் கடவுளாகிய சதாசிவப்பெருமான் எனக்கிட்ட கட்டளையை மீறிநடப்பது எனக்கழகாகுமோ? ஏன் வீணாக வார்த்தையை வளர்க்கின்றீர்?

நார:— எமதருமா! அப்படியல்ல; நானோ இதற்குமுன் எதொருகாரியத்திலும் தலையிட்டபின் வெற்றிபெறாதிருந்ததில்லை. நீரோ ஒருமுறை தவறியிருக்கின்றீர்.

எம:— (கோபத்துடன்) யானா தவறியிருக்கின்றேன்?

நார:— ஆம்; வாஸ்தவமாகவே தவறியிருக்கின்றீர்.

எம:— ஒருபோதுமிராது.

பாட்டு

யாபஞ்சதன்பஜானா என்ற மெட்டு.

பல்லவி.

நார:—ஏமா நீ மறந்தாயோ
எம:—என்னோ மறந்ததியானோ

அநுபல்லவி.

நார:—நீமார்க்கண் டனைமுன் தொட்டாய்
நிருமலன் காலாலுதைபட்டாய்
எம:—வாமான் கட்டளைக்குட்பட்டோம் அதை
வசைபென வேதுறித்துற்றீர்

வசனம்.

நார:— எமதருமா! முன்னொருகால் மார்க்கண்டன் விஷயத்தில் ஒரு தவறு செய்திருக்கிறீரல்லவா?

எம :— அதெவ்விதம் தவறியதாகும்? சாட்சாத் சதாசிவப்பெருமானே அதுவிஷயத்தில் தலையிட்டுக் கொண்டாராதலால் யானும் அவராக்கினைக்குட்பட்டே நடக்கிறேன்.

நார :—ஓ! அப்படியா ?

பாட்டு.

பல்லவி.

ஆ	னவனோ சிரஞ்சீவி
எம :—அறிவே	னையன் பத்தியுதவி

அநுபல்லவி

நார :—அவ்வண்ண	மிதற்கெனவறிவீர்
எம :—ஆகா தென்	னுவிதைத் தெரிவீர்
நார :—ஆருமென்	னுலெனத்தேறும்
எம :—ஆனுலேன்	றெருகை பாரும்

வசனம்

நார :—எமதருமா!, அம்மார்க்கண்டனுக்கு என்றும் சிரஞ்சீவிப் பாக்கியத்தை அளித்ததனையே அஃதுனக்குத்தகுமா ?

எம :—அவன் சதாசிவப் பெருமானிடத்துக் கொண்டிருந்த பக்தியின் காரணமாகவதைப் பெற்றான்; அதற்கென் செய்வது ?

நார :— அவ்விதமாகவே இது விஷயத்திலும் நினைத்துச் சற்றுத் தயை புரியலாகாதா ?

எம :—என்னதான் சொன்ன போதிலும் இது விஷயத்தில் தலையிட்டுக்கொள்ள என்னால் முடியவே முடியாது.

நார :—அஃதிருக்கட்டும்; நீர் இதுவிஷயத்தில் தலையிட்டுக்கொள்ளாவிடின் அச்சத்தியவானைக்காப்பாற்ற எனக்குச் சக்தியில்லையென்று நினைக்கிறீர் ?

எம :—உம்மால் கூடியமட்டும் பிரவேசித்துப்பாரும். மற்றவைகளைப் பின்பு கவனிப்போம்.

[சத்தியவான் உயிரைக் கவாச் சென்ற தூதர் ஓடி வருகின்றனர்.]

தூ:— செந்தலேப்பூதா வாடா என்ற மெட்டு.

என்ன செய்வோ மினியே—நாங்க
ளேது செய்வோந் தனியே.
கன்னி சாவித்திரி கற்பனலிற் புகக்
கருதி யகந் துணியோம்

வசனம்.

மகாராஜா! நாங்களென்ன செய்வோம் அன்னவன் பத்தினி யாகிய சாவித்திரி யென்பவள் அவனேவிட்டுச் சற்றும்பிரியா திருக்கிறுள். நாங்கள் எவ்வளவோ முயன்றும் அவளுடைய கற்பனற்சுவாலே யெங்களே நாடவிடாமற் தகிக்கிறதே யென் செய்வோம் பிரபு!

[பதில்சொன்ன தூதரிலொருவனே
நோக்கிக் கோபத்தோடு]

எம:— பாட்டு

என்னசொன்னுய் மடையா எனக்
கேற்பதிந்த விடையா
உன்னத சத்திய வந்தனுயிர்கவர்ந்
துகந்துவருவேன் தடையா

வசனம்

அடாடாடாடா! என்னவார்த்தை தெரிவித்தீர்களடா! இதோ பாருங்கள் யான்சென்று அந்தச்சத்தியவா னுயிரைக் கவர்ந்து வருகிறேன்.

நார:— (சந்தோஷத்துடன்) எமதருமா! நான்சொல்வதைக்கேளும் ஒளியப் புகுந்தும் தலேயாரி வீட்டில் ஒளிந்தமாதிரி வீணுக என்னேடு சபதம்போட்டுக் கொள்ளாதீர்! சத்தியவானின் உயிரைக் கவரமுடியாது உம்முடைய தூதர்களும் ஓடிவந்து விட்டனர். இதற்கெல்லாம் சாவித்திரியின் கற்பே காரணம் மார்க்கண்டனின் பக்தி மகிமையால் என்றும் சிரஞ்சீவிப்பாக்

கியத்தை யளித்திருக்கிறீர்; இது விஷயத்தில் சாவித்திரியின் கற்பை யுத்தேசியும். அன்றியும் மார்க்கண்டன் விஷயத்தில் சதாசிவப்பெருமானை உத்தேசித்திருக்கிறீர்; இது விஷயத்தில் என்னை உத்தேசித்தாவது செய்யலாகாதா? பக்திவிஷயத்திற்கு என்றுஞ்சிரஞ்சீவிப் பாக்கியத்தை யளிக்கும்போது கற்பு விசேஷத்திற்கு ஏதாவது சொற்ப ஆயுளையாவது தரலாகாதா?

எம:— (கோபத்தோடு) பாட்டு.

சீச்சீ என்முன் என்ற மெட்டு.

பல்லவி.

போம்போம் என்முன் இந்தமதி
போதிப்ப தாகுமா வாதிப்பதாகுமா (போ)

அநுபல்லவி

புவியும்வானுங் கீழ்மேலாகப்
புரண்டு மாறினுங் கதிர்மதியும்
புகலுந்தென்வட லாகத்தவறினும்
போதுந்தவறிடே னெனமதியும் (போ)

சரணம்.

நார:— போகிலெனவனுயிர் காக்கிறேன்
எம:— யா னேகியவனையிங்கு சேர்க்கிறேன்
நார:— ஆகினுமொருகை பார்க்கிறேன்
எம:— நீ ராணதைப்பாருமிங் கேனதையியம்புதீர் (போ)

வசனம்.

உம்மாலானமட்டு மொருகை அல்லஇரண்டுகைகளால் வேண்டுமாயினும் பார்த்துக்கொள்ளும்; இதோயானே நேரிற்சென்று அவனுயிரைப் பிடித்து வந்துவிடப்போகிறேன்.

நார:— (கோபத்தோடு) எமதருமா! யான் எவ்வளவோ சொல்லியும் கேளாது நீரே நேரிற் செல்வேனென்றீர். நீர் சென்றும் அவனுயிரைப் பிடித்து விடுவீரேயன்றி அதைவைத்துக்

கொள்ள உம்மால் முடியாது. அப்படி வைத்துக்கொள்வீராயின் என்னுடைய பெயரை மாற்றிக்கொள்ளுகிறேன்; தடையில்லை; தக்க சமயத்தில் அவமான முறுவீர்.

[நாரதர் இனி இங்கிருப்பதிற் பிரயோசனமில்லையெனத்தெரிந்து தன்பிதா விடஞ்சென்று அன்னவருதவியால் கருணாதேவியை எமதருமனின் இருதயத்திலிருத்தி எமனை ஏமாற்றுகிறார்.]

அங்கம் 7. 2—வது சீன்

கானகம்.

சத்தியவான் சர்சரவென மரத்தைவிட்டிறங்குகிறான்.

சத்:— ஆ! (கைக்ளைத் தலைமேல் வைத்துக்கொண்டு)

விருத்தம்.

அன்னமே மின்னே யென்தன் ஆருயிரனையதேவி
என்னமோ கண்ணிரண்டு மிருளடைந்தது போலாகி
என்னதிவது மயங்க விறுத்துது தலை நோய்மிக்க
முன்னயனமைத்தவேளை முடிந்ததோவறிகிலேனே.

வசனம்.

அடி என் உயிருக்குயிராகியவளே! ஆ! யானென்செய்வேன்.

சாவி:—(சத்தியவான் தலையைப்பிடித்துக்கொண்டு பதட்டத்தோடு) நாதா! என்ன? என்ன?

சத்:— ஐயோ! என்கண்களிரண்டு மிருளடைகின்றனவே! தலைநோவினால் என் அறிவு குன்றுகின்றதே! ஆ! என்பிராணன் போய்விடும் போலிருக்கிறதே! [தள்ளாடுகிறான்]

சாவி:— (விழுந்து விடாமல் சத்தியவானைப் பிடித்துக்கொண்டு) நாதா! யாதுவார்த்தை தெரிவிக்கிறீர்கள். ஒன்றுமில்லை; தைரியமாக விருங்கள்.

சத்:— (தள்ளாடிக்கொண்டு)

ஏந்திழையே என்ற மெட்டு

பல்லவி.

சாவித்ரியே கண்ணே (சா)
தருணமெனக் கொருவிதமாய்த்
தலைநோயுமீறுது நிலைதடுமாறுதென் (சா)

அநுபல்லவி.

ஆவிது டிக்குதடி
ஐயோவென்செய்குவேன் மெய்யெல்லாஞ் சோருதே (சா)

சரணம்

காவிலுனைத்தனி யாகவிடுத்துக்க லங்கிடலானேனே
காதலி யாதர வேதுங்காணேனே
கவலுடையெனை யருளனைபிதா
வவர்களுக்கேது தவியிலையடி (சா)

வசனம்.

ஆ! சாவித்திரி! இச்சமயம் என்றுமில்லாத விதமாய் என்தலை ஓர்பெரிய மலையைச் சுமப்பதுபோல் கனக்கின்றது. என்னாற் பொறுக்கமுடியவில்லை. அன்றியும் தலையில் நோவு இருக்க விருக்க அதிகமாவதால் என் சுயவறிவு என்னிடத்திலில்லை. ஆ! என்கண்ணே! யானென்செய்வேன்! என் திரேகமுற்றிலும் சோர்வடைகின்றது. என்உயிரானது இச்சடலத்தை விட்டு இதோ போய்விடுவேன் என்றுசொல்வதுபோல் துடிக்கின்றது. அடி சாவித்திரி! ஆ!

சாவி:— நாதா! இம்மாதிரியெல்லாம் சொல்லவேண்டாம். பேசாதிருங்கள் பேசினால் அதிக கஷ்டமுறுத்தும்.

[சத்தியவானை மெதுவாக உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து உபசரிக்கிறாள்]

சத்:— ஒன்றுமறியாத உன்னை இக்கானகத்தில் தனியாகவிட்டுக் கலங்குகின்றேனே! ஐயோ! இச்சமயம்உதவிசெய்வதற்குவேறு

ஒருவரையுங்காணேனே! என் தாய் தந்தையர் என்னபாடு படு கின்றார்களோ! அவர்களை அன்புடன் உபசரிக்கும் நீ என்னுட னிருந்து கஷ்டமனுபவிக்கின்றனையே! வேறு யார்தான் அவர் களுக்குத் தற்சமயம் உதவிசெய்வார்!

சாவி:— பிராணநாதா! அவர்களைப்பற்றிக் கவலையேவேண்டாம்! என்னிலும் பதின்மடங்கு உபசரிப்பதற்குத் தங்கள் சகோ தரர்போன்ற சிநேகிதர் மாடவ்யர் இருக்கின்றார். நாதா! வீணு கக்கலங்கவேண்டாம்; ஒன்றும் நேரிடாது; தைரியமா யிருங்கள்.

சத்:— (பதறி உட்கார்ந்தபடியே சாவித்திரியின் மடியில் வீழ்ந்து இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு) ஐயோ! என்செய்வேன் ஆ! ஜெகதீசா!

சாவி:— நாதா! என்ன? என்ன? தைரியத்தைக் கைவிடாதீர்கள்.

சத்:— சதாசிவசுதா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அதோவருகிறான் யாரோ ஒருவன்—அதி
கோர ரூப மாய நேகம்
கொடுமைக்குண மொடெனெதிரி (லதோ)

வசனம்.

ஆ! சாவித்திரி! அதோபார். யாரோ ஒருவன் அதிக பயங் கரமான ரூபத்தோடு என்னைநோக்கிப் பலவித துர்ச் செயல களைப் புரிந்து கொண்டு வருகிறான. ஆ! யான் எவ்விதம்சகிப் பேன்! என்கண்ணே! இன்னும பார்

அநுபல்லவி.

கதாயுதம் பாசக் கயிறதைவீசியே
கறுத்தமீசையும் பெருத்ததேகமும்
கண்ணைப்பறிக்கக் கனைத்துக்கொண்டருகினி(லதோ)

வசனம்.

அவன் கதாயுதத்தைச் சுழற்றி யென்மேலெறிகிறான். பாசக் கயிற்றை வீசி என்னைப் பிடிக்கமுயலுகிறான். ஆ! சாவித்திரி

என்னைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். விட்டுவிடாதே. இச் சமயம் என்னைவிடுவையாகில் அவன் என்னை இழுத்துக்கொண் டேபோய்விடுவான். ஆ! அவனின் கறுத்த மீசைகளும்பெருத் ததேகமும் என்கண்களைப் பறிக்கின்றன. அவன் இரையும் இரைச்சலானது கடலொலிபோல் என்காதுகளில் விழுகின் றது. ஐயையோ!

சரணம்.

சூலங்கொண்டென்சிர மேலூன்றிக்குத்துறான்
தோகையே எது செய்வேன்
மேலுஞ்சிவந்த விழிகளுருட்டி
மிரட்டுறு னெவ்வாறுய்வேன்
மிடி சகியே னடிமயிலே
பிடிபிடியென துடல் நடுங்கிட (வதோ)

வசனம்.

சூலாயுதத்தை என் தலைக்கு நேராக வைத்துக் குத்துகிறான் அக்கினியைப் பழிக்கும் இரண்டு கண்களினாலும் என்னைப்பய முறுத்துகிறான் ஐயோ! என்னாற் சகிக்கமுடியவில்லையே! கண் மணி! யான் இத்துணைப் பாடுகள் படப்போகிறனென்று தெரிந் தேதான் என்னைத் தொடர்ந்துவிட்டனையோ! ஆ! எனதுடல் நடு ங்குகிறது; கெட்டியாய்ப் பிடித்துக்கொள்.

[சத்தியவான் மூர்ச்சையடைகிறான்]

சாவி:— ஆ! பிராணேசா! பிராணேசா! [பதிலில்லை]

சின்னவயதிலிந்த என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஐயோ! இனி என் செய்வே னே — ஆ!
ஆறுமற்ற பாவியே லானேன்
மெய்யும் பதறுதே மேதினி மீதே
உய்யவேறேதுந் துணை இல்லையே—யான்
உலைவாய் மெழுகாகினேன் தொல்லையே

வசனம்.

ஆ ஜெகதீசா! இனி யான் என் செய்வேன் ஜன சஞ்சாரமில்லாத காட்டில் நாதியற்ற பாவிகளைப்போல் கலங்க வைத்தனையே! என் உடல் பதறுகின்றதே! உயிர் துடிக்கின்றதே! இவ்வுலகத்தில் எனக்கு இனிமேல் வேறு துணை யார் இருக்கிறார்கள்! ஐயோ!

[சத்தியவானுக்குச்சற்று பிரஞைஞயுண்டாகிறது சாவித்திரி புலம்புவதைக்கேட்டுப்பேச நாவெழாமல் கவனிக்கிறான்]

பாட்டு.

மஞ்சளிழக்க வய — தாச்சோ—ஆ!
மாங்கல்யம் புட்பம் பறி — போச்சோ
மஞ்சுளநாதன் — மடிந்திடத்தானோ
முன் சொல்லிய நாரதர் — பேச்சே—போல்
முடியுமோ தோணேனீ — தேச்சே

வசனம்.

இச்சிறுவயதில் மஞ்சள் புஷ்பம் மாங்கல்யம் முதலியவைகளை இழக்குமாறு என் பிராணநாதர் இறந்துவிடுவாரோ! ஐயோ கலியாணத்தின் முன்பு சத்தியவானுக்கு இன்னும் ஒரு வருடத்தில் ஆயுள்முடிவு என்று நாரதமஹாமுனியர் சொல்லிய வாக்குப்போல் நடந்துவிடும்போலிருக்கிறதே! ஈசா!

பாட்டு.

என்ன பெண் சென்மமிதை — எடுத்தேன்—ஆ!
இறைவன் கதியறிந்து — துடித்தேன்
முன் செய்வினையோ — மூண்டதிந்நாளிலேயோ
மன்னனில்லா மடந்தை — யாகவோ—யான்
மாநிலத்தோர் வசைக்குள் — ளாகவோ

வசனம்.

உலகத்திலுள்ளவர்கள் பதியை யிழந்த பாவியெனவசைமொழி கூறும் படிக்காய்விடுமோ? ஆ! ஜெகதீசா! இருந்திருந் தெம்

மாதிரியான ஜென்மத்தை எனக்குக் கொடுத்தாய்! இஃதெல்லாம் முன்செய்த வினையின பயனே

[சத்தியவானின் மூர்ச்சை தெளியும்படி உபசரிக்கின்றாள்].

சத்:— (மூர்ச்சைதெளிந்து) ஆ! சாவித்திரி! இதுவரை உன் அந்தரங்கத்தை அறியாது யான் ஏதேதோ நினைத்திருந்தேன். இப்போது உன் உட்கருத்தை நன்றா யறிந்துகொண்டேன். அடி கற்புக்கடலே! ஆ! ஐயோ! இதோ என் உயிரானது பிரயாணப்பட்டு விடும்போலிருக்கிறது. சாவித்திரி! அதற்குள்ளாக உனக்கொரு வார்த்தைசொல்ல நினைக்கிறேன். கவனமாய்க் கேள். என் கண்ணே! இதுகாலம்வரை என் பெற்றோர்களும் நானும் எவ்வளவோ சங்கடங்கட்குள்ளாயிருக்கிறோம்; அவைகளைப்பற்றிய கவலை எனக்குச்சற்றேனும் இல்லை. இனிமேலும் என்பெற்றோர்கள் எவ்வளவோகஷ்டப்படுவார்களென்று நினைக்கிறேன்; அதைப்பற்றிய கவலையும் எனக்குக்கொஞ்சமேனும் கிடையாது. உலகின்கண் இன்னும் எவ்வளவோ காரியங்களைச் சாதிப்பதென நினைத்திருந்தேன்; அவைகளைப்பற்றிய ஆசையும் ஒழிந்தது. ஆனால் அடி என் ஆருயிர்ச்செல்வியே! நாரத மகாமுனிவரால் எனது ஆயுட்கணக்கை யறிந்திருந்தும் ஓரே சாதனையாக என்னையே மணஞ்செய்து கொள்வதாய்க் கூறி அவ்வண்ணமே நடந்துகொண்ட உன்னோடு இன்னும் சொற்பகாலம்வரை இல்லற தருமத்தை நடத்தாது போகின்றேனே என்னும் கவலைதான் என்னைப் புண்படுத்துகின்றது. (துடித்து) ஆ! சாவித்திரி இதோ என்னைப் பிடிக்கக் கயிற்றைவீசிவிட்டான். ஐயோ! இழுக்கிறான். யான் சென்றுவருகிறேன். ஆனால் கடைசியாக ஓரே ஒருவார்த்தை. "உலகின்கண்ணுள்ள ஜீவராசிகள் தத்தம் மரணகாலங்களில் எதெதை நினைத்து உயிர்விடுகின்றனவோ அதனதை அடைவதற்கென உடனே மறுஜெனன மெடுக்கின்றன" என்று பெரியோர்களுடைய திருவாக்காதலின் யான் யென்னுடைய மரணகாலத்தில் உன்னை நினைத்துக் கொண்டே செல்கிறேனாதலால் கட்டாயம் உன்னை

பே அடுத்த ஜெனனத்தில் மனைவியாய்ப்பெறவேண்டுமென நினைக்கிறேன். அக்காலத்தில் இச்சன்மத்தில் நேரிட்ட குறைகளனைத்தையும் நிவர்த்திக்துக் கொள்ளலாம். ஆ! இதோ என்னை மறுபடியும் இழுக்கிறான். யான்சென்றுவருகிறேன்.

[சத்தியவானின் உயிர் பிரிகின்றது விஷயமறிந்த சாவித்திரி இனிவிசனப்படுவதில் பயனில்லையென்றும் நாரத மகாமுனிவரின் உபதேசத்தைப்போல் எமதருமரைக்கண்டு பதியின் உயிரை மீட்டல்வேண்டுமென்றும் நினைத்து நாற்புறங்களிலும் சுற்றிப்பார்க்கிறாள். எமதருமரின் உருவம் தோற்றுகின்றது.]

சாவி:— (தனக்குள்) ஆ! இதோ நிற்பவர்தான் எமன்போலும்! சென்று மாங்கலய பிச்சை கேட்கிறேன்.

[அருகிற் செல்லுகிறாள்].

சாவி:— சாவித்ரியே என்ற மெட்டு.

பல்லவி.

ஆரையா நீர் இங்கு வந்த (து)

வசனம்.

ஐயா! மனித சஞ்சாரமில்லாத இக்காட்டில் என்முன் வந்து நிற்கும் தாங்கள் யார்?

எம:— (அதிசயித்து தனக்குள்) இஃதென்ன ஆச்சரியம்! இதுவரை நாரர்கள் கண்களுக்கு யான் புலப்பட்டதில்லை இம்மாது எவ்விதத்திலோ என்னைக்கண்டு கொண்டாள். யாரென என்னைக்கேட்டதற்கு பதிலுரைக்காது செல்லுதல் உசிதமல்ல; பேசிப்பார்ப்போம் (வெளிப்படையாக)

பல்லவித்தொடர்.

ஆரணங் கே
அறிகுவாய் தென்றிசைக் கதிபதியான் தானே

வசனம்.

ஏ பெண்ணே! உலகின் கண்ணுள்ள ஜீவராசிகளின் ஆயுட் காலமுடிவடைந்ததும் அவைகளைப்பிடித்துவரச்செய்யும் எமனியான்.

சாவி:— (நமஸ்கரித்து) பாட்டு—அநுபல்லவி.

நீரிங்கு வந்ததேன்
எம:— நின்றுதன் தன்றுவி
மின்னேக வர்ந்திடத்தான்

வசனம்.

உன் மணவாளனினுயிரைப்பிடித்துச்செல்லத்தான் வந்தேன்.

சாவி:-- சுவாமி தங்களைத் தருமராஜனென்று எல்லோரும் சொல்வார்களே! அவ்வாறிருக்க, பேதையாகிய வென்னைப்பரதவிக்க விட்டு என் நாதனுயிரைக்கொண்டு செல்வது

பாட்டு—சரணம்.

நீதியோவென் னுதனுயிர் தந்திடுவீர்
எம:- ஆகியமைப் பீதுனைவ றிந்திடுவாய்

வசனம்.

பெண்ணே! நீ பேசுவது அதிக விந்தையாகவிருக்கின்றது. உன்னைப்பரதவிக்கவிட வேண்டுமென்பது என்னுடைய கருததல்ல "விதியின் பயனே பயன்" என்பதுபோல் உன் முனஜென்ம கன்மானுசாரப்படி. பிரமதேவனால் அமைக்கப்பட்டவிதந்தான் நடக்கும் உன் நாதனுயிரைக் கொடுக்கமுடியாது.

சாவி:— சுவாமி! அப்படிச் சொல்லலாகாது கற்புடைய பெண்கள் கணவனை யிழந்தபிறகு உலகிலிருந்தாலவதென்ன? தயவுசெய்து என் நாதனுயிரைக் கொடுத்துவிடுங்கள். அல்லது

பாட்டு—சரணத்தொடர்.

மாதெனத் ஆவியையுங் கொண்டுசெல்வீர்
எம:— போதுவரும் போதுனுயிர் கொண்டுசெல்வேன்

வசனம்.

ஏபேதாய்! அறியாமையினுற் பலவிதமாய்ப் பேசாதே. உன் நாதனுக்குப் பிரமதேவன் இட்ட ஆயுட்காலம் முடிவடைந்து விட்டபடியால் அன்னவனுயிரைக் கொண்டு செல்லுகிறேன். உன்கோரிக்கைக் கிணங்கி அதை இங்கு விட்டுச்செல்லவாவது அல்லது அத்துடன் உன்உயிரையும் சேர்த்துப்பிடித்துச் செல்லவாவது எனக்கு அதிகாரம் கிடையாது. உனது ஆயுட்கால முடிவில் உன்னைக் கேட்காமலே உன் உயிரைப் பிடித்துச் செல்வோம்.

சாவி:— சுவாமி. என் இரண்டு கோரிக்கைகட்கும் உட்படமாட்டே னென்கிறீர்கள். என்னைப் பாதவிக்கவிட வேண்டுமென்பது தங்கள் கருத்தல்லவென்றுஞ் சொல்லுகிறீர்கள். இவ்விதம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாது பேசினுல்.

பாட்டு—சரணத்தொடர்

மனமது சகியேன்
எம:— வாதுசெய் யாதேநின் மன்னனுயிர் தருவதிலை
செல் செல் செல் செல்

வசனம்.

உன்னுற் சகிக்கமுடியாதெனின் அதை என்னிடஞ் சொன்னுலாவதென்ன? வீணுக வழக்குப்பேசாமல் திரும்பிச்சென்று நடக்கவேண்டிய காரியத்தைப் பார்.

சாவி:— அப்படிச்சொல்லக்கூடாது. எனக்குற்ற துயரத்தை நிவர்த்தித்தனுப்பவேண்டிய தாங்களே என்னை வந்தவழிபார்த்துச் செல்லென்றுல்.

பாட்டு.

பையல் மாரன் என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஐயனே யென் செய்குவேனுன்
அடைக்கலமும் பாகமே

ஏம:— தைவதாலென் செய்வதாதி
நாதனைமைப் யாருமே

வசனம்.

பேதாய்! முன்வினைப்படி நடந்துசென்ற விஷயத்தைக் குறித் துத் துக்கித்தால் யான் என்ன செய்யமுடியும்.

சாவி:— சுவாமி! அடைக்கலம் புகுந்தாரை ஆதரித்தல் அறிவுடை யோர் கடனென் அறிவுறுத்தும் அறநூல்களெல்லாம் மறநூல் களாமாறு தாங்களிவ்விதம் சொல்லிவிடும் பட்சத்தில்

பாட்டு—கண்ணித்தொடர்.

உய்யவேறு கதிகாணேனே
ஏம:— ஓஹோ உற்றாருனைக் ஆதவிதானே

வசனம்.

சபாஷ்! உன்னைப்போன்ற சமர்த்திகளுடன் யான் இதுவரை சம்பாஷித்ததேயில்லை. தாய், தகப்பன், மாமன், மாமி முத லிய எவ்வளவோ பந்துக்களெல்லாமிருக்க பிழைப்பதற்கு வேறு கதி இல்லையென்றனையே! என்ன ஜாலம்! என்ன சாமர் த்தியம்!

சாவி:—“குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற புதல்வர்க்குத் தந்தையும் தாயும்” என்றபடி நான் ஆணாய்ப்பிறந்திருந்தால் என்னை என் தாய் தகப்பன்மார் பிரியத்தோடு கொண்டாடு வார்கள்; அவ்விதமே என் நாதனிருந்தால் அவரின் தாய் தக ப்பன்மாரான என் மாமன் மாமியார்கள் என்னையும் அன்புட ன் ஆதரிப்பார்கள். ஆகையால் சுவாமி!

பாட்டு 2வது கண்ணி.

உற்றோர் பெற்றோரு மற்றோரிருந்தென்
உரிய நாதன் வேண்டுமே
ஏம:- எற்றோஷினியுன் பத்தாவுயிரை
எண்ணிடாதே எஞ் ஞான்றுமே

வசனம்.

பெண்ணே! உன்னோடு வாதாடிக்கொண்டிருந்தால் என் வேலைகளெல்லாம் பாழாய்ப்போய்விடும்; அஃதெப்படியிருந்தாலும் சரி; இனி ஒருபொழுதும் உன் நாதனுயிரைச் சிந்தியாதே "கிட்டாதாயின் வெட்டன மற" என்றபடி உடனே மறந்துவிடு.

சாவி:— ஆ! ஐயோ! யான் இனியென் செய்வேன் சுவாமி! பெண்ணென்றால பேயுமிரங்குமே! தாங்கள் அறக்கடவுளாக விருந்தும் இவ்வாறு பிடிவாதஞ் செய்கிறீர்களே! தங்கள் பால் இரக்கமென்பது சற்றேனு மில்லையோ? ஐயோ! தாங்கள் சொல்லும் விதம் செய்யலாமெனில் ஒருவருடகாலமாய் என்னைவிட்டு ஒருகணமும்பிரியாதிருந்த என துயிருக்குயிரானபத்தாவைச்

பாட்டு—கண்ணித்தொடர்.

சற்றும்பிரிந்து சகித்திடேனே

எம:— சகித்திடிலென்ன சகசந்தானே

வசனம்.

உலகத்தில் ஆணாய்ப்பிறப்போர் பெண்ணுக்காகவும், பெண்ணாய்ப் பிறப்போர் ஆணுக்காகவும் சகிக்கமுடியாத் துயருறுவது சகசந்தானே! எல்லாம் அவரவர் கன்மானுசாரமின்றிவேறல்ல. இனி உன்னுடன் பேசுவதற்கு எனக்கவகாசமில்லை. பேசாமல் வந்தவழி பார்த்துப்போ. இதோயான்செல்கிறேன்

[போகிறார். சாவித்திரி தொடர்ந்து செல்லுகிறாள்]

தர்க்கம்—இங்கிலீஷ் நோட்.

சாவி:— என்மேற்கோப மாகுமா

எம:— எதிவ்வாதிங் காகுமா

சாவி:— ஏழை நானே என்முகம் பார்த்தருள்வீர்

எம:— ஜாலம் ஏனோ தையலே சென்றிடுவாய்

சாவி:— எமபதியே யிதுததியே யிலைகதியே யிரங்குவையே

எம:— இரங்கிடிலே தெனாலாவதே திலையிலையி சன்கட்டளையே

வசனம்.

எம:— பெண்ணே! என்னிடமிரக்கமென்பதில்லாமலில்லை; ஆனால் நான் இரக்கமுற்று யாது பிரயோஜனம்? ஈசனாலேற்படுத்தப் பெற்றகட்டளையானது உனக்கு எவ்விதத்திலும் உதவிசெய்ய இடந்தராதே!

சாவி:— ஆ! சுவாமி! நன்று, நன்று, தங்களுக்குக்கட்டளையிடுபவர்

பாட்டுத்தொடர்.

ஈசனென்றீ ராஜனும — இட்டதன்றோ

எம:— ராஜனென்று வீசனருள் — சட்டங்கடாகும்

வசனம்.

அரசனென்றால் பூலோகத்தரசர்களைப்போன்று நினைத்ததையெல்லாம் சட்டமாக்கிக்கொள்ள முடியாது. எங்கள் சட்டமெல்லாம் சாட்சாத் மகேசுவரனாலேற்படுத்தப்பெற்றது; அதினின்று ஓர் தினையளவும் தவறமுடியாது.

சாவி:— ஓஹோ! அப்படியா! அவராலேற்படுத்தப்பெற்ற

பாட்டுத்தொடர்.

சட்டமென்ன — பொய்த்திடாதோ

எம:— திட்டமீது — பொய்த்திடாதே

சாவி:— காசினியில் பொய்த்ததேமார்க் — கண்டனுக்காய்

எம:— பேசிடுமுன் கற்பின்றிரம் — கண்டேனிக்கால்

வ ச ன ம்.

பேஷ்! பேஷ்! உன்னை மெச்சினேன்! மார்க்கண்டனுக்கு சாட்சாத் சிவபிரானே திருவருள்புரிந்தாரன்றி நான் ஒன்றும் செய்யவில்லை ஆனால் அவர் ஆக்கினைக்குட்பட்டேன் நீயும் அன்னவரிடம் சென்று முறையிடுவையேல் ஏதேனும் பலிக்கும்.

சாவி:—தேவனே! என்னை ஒன்றுமறியாப் பெண்பிள்ளைதானே என ஏமாற்ற நினைத்தீர்கள் போலும்! தாங்கள் வேறு சிவன் வேறா? அவரே தாங்கள் தாங்களே அவர்; அவ்வாறிருக்க நான் சிவ

னென்று வேறு யாரைத்தேடிப்போவேன்? தங்களை இதுகா றும் எமதருமராஜரென நினைத்ததைவிட்டு இப்பொழுது சாட்சாத் சிவபெருமானெனவே நினைத்துக் கேட்கின்றேன் என் நாதனுயிரைக் கொடுத்துவிடுங்கள்.

ஏம:—பெண்ணே! நன்று நன்று! உன் பேச்சுக்களைக்கேட்டு என் மனமுருகுகிறது. உன்நாதனுயிரைத் தவிர்த்துவேறுவேண்டிய வரம் ஏதேனும கேள் தருகிறேன்.

சாவி:—(தனக்குள்) இப்பொழுதுதான் வழிக்குவருகிறார்;வந்ததை ஏன் விடவேண்டும் (பகிரங்கமாக) சுவாமி! என்மாமன் மாமி யார்கள் இழந்துவிட்ட கண்களையும் இராச்சியத்தையும் மறு படியும் பெறுமாறு அனுக்கிரகம் செய்யவேண்டும்.

ஏம:—அவ்வாறே தந்தேன் இனி திரும்பிச்செல்.

[விரைந்துசென்று மறைகிறார்]

சாவி:—(திடுக்கிட்டு) ஆ! எங்கு சென்றார்? திடீரென மறைந்து விட்டாரே! ஆகட்டும் இதோ பின்தொடர்கிறேன்.

[வேகமாய்ப்போகிறாள்]

அங்கம் 7. 3-வது சீன்.

மலைத்தொடர்.

எமதருமர் செல்கிறார் சாவித்திரி பின்தொடருகிறாள்.

ஏம:— (தனக்குள்) இம்மலைத்தொடரினைக் கடந்து வரமாட்டாள் அவளால் முடியவும் முடியாது. [போகின்றார்]

சாவி:— (எமதருமரைக்கண்டு) ஆ! அதோ போகின்றார் சீக்கிரம் போய் அவர் மனத்தை மறுமுறையுருக்கவேண்டும்.

(விரைந்துசென்று)

பூமதனில் என்ற மெட்டு.

கண்ணிகள்.

என்முகம்பாரும் தன்மசொரூபா
ஏழை நான் இதுதருணமே

வசனம்.

சுவாமி! ஏழையாகிய என்னைப் பரிதவிக்கவிட்டுத் திடீரெனமறைந்து விட்டீர்களே! தயைசெய்து என் முகத்தைப்பார்த்திரக்கங் கொள்ளலாகாதா

ஏம:— (தனக்குள்) ஆஹா! இன்னவளின் திறந்தானென்னே! எவ்வளவோ பெரிய பகைகளையுங் கடந்து விட்டாளே! (வெளிப்படையாக)

பாட்டு.

துன்பமதேது கன்மபூமிதா
ஜா லம் என் தடைசெய்யாதகல்

வசனம்.

மாதே! இக்காலத்தில் தருமத்திற்குப் பார்த்தால் கருமமாய் முடிகின்றது. நான் தருமத்திற்குப் பயந்து ஏற்கனவே ஓர் வார்த்தைக் கொடுத்துவிட்டேன்; மறுபடியும் பின்தொடர்ந்து உன் வாய் ஜாலத்தைக் காட்டுகிறாய். இதெல்லாம் வீண் மறுக்காது திரும்பிச்செல்.

சாவி:— தாங்கள் கொடுத்ததை இல்லையென்று சொல்லவில்லையே! ஆயினும் நான் கோரியது இன்னும் கிடைக்கவில்லை. தங்களை நம்பி எவ்வளவோ தூரம் கால்கள் கடுக்குமாறு நடந்துவந்திருக்கிறேன். அதை நினைத்தாவது

பாட்டு.

வண்மையில்லாது என்மணவாளன்
மா வு யிர்தா மனமதிலினும்

வசனம்.

இன்னமும் சாதிக்காமல் என் மணவாளனி னுயிரைக் கொடுத்தனுப்புமாறு வேண்டுகின்றேன்.

ஏம:— நான் சொன்னவற்றையெல்லாம் மறந்து மறுபடியும் உன் நாத னுயிரையே கேட்கின்றாய் பார்.

பாட்டு.

பெண்மதியீது பின்மதிதானே
பே தாய் போ பின் தொடராதே

வசனம்.

"பெண் புத்தி பின் புத்தி" என்பது சரியாகவிருக்கின்றது. பேசாமல் திரும்பிப்போ தொடர்ந்து வராதே.

சாவி:— சுவாமி "பெண் புத்தி பின்பு உத்தி" தான். முதலில் "பெண்புத்தி" யென்று இகழ்வதும் பின்பு "அதுவுமொரு யுக்திதா" னென்று புகழ்வதும் சகஜம். அதுபோலவே தாங்களும் இப்பொழுது பெண்புத்தி யென்றிகழ்கிறீர்கள். பின்னால் தாங்களே என்னைப் புகழ்வீர்கள்.

எம:— ஆஹா! உன் வியாக்கியானத்திற்கு மெச்சினேன். ஏதாவது சொல்லி என் மனத்தைக் கரைத்துவிடுகிறாய். உன் நாதனுயிரைத் தவிர்த்து வேறு ஏதேனும் ஓர்வரங்கேள்.

சாவி:— தொகையறா.

உண்மையிலென் பெற்றோர்க் கென்னையல்லாது வே
றொருமகவு யில்லை கோனே
இன்னமு மாண்மக்க ளுதித்திடுமாறு வர
மீனிதருளுவாய் பூமானே

வசனம்.

சுவாமி! என் தாய்தந்தையர்க்கு என்னைத்தவிர வேறு குழந்தைகளில்லை. ஆதலால் அவர்கள் அகங்குளிர ஆண்மக்கள் பிறக்க வரமளிக்கவேண்டும்!

எம:— தொகையறா.

கன்னிநின் பெற்றோர்க்குக் கருதியவாறுபல
காண்முனைகள் தோன்றும்பேறே
என்னிரு தயக்களிப் போடளித்தேனினி
ஏகுவாயுந்த னூரே

வசனம்.

நீ விரும்பியபடியே தந்தேன் இனி நீ உன் பதியைநாடிச்செல்

பாட்டு.

சாவி:— வந்தனங்கோடி தந்தேனன்போடு
வா கா யுன் மலரடிதேடி

வசனம்.

சுவாமி! தாங்களிவ்வளவு தூரம் எனக்காகச் செய்த பேருபகாரத்திற்கு யான் என்ன கைம்மாறு செய்வேன்.

பாட்டு.

எம:— எந்தனைநாடித் தொந்தரியாது
ஏ கா யோ இதோசெலுகிறேன்

வசனம்.

நீ மறுபடியும் என்னைத் துடர்ந்து வராதிருத்தலே ஒருகைம்மாறாகும். பேசாது திரும்பிச்செல். இதோ நான் செல்லுகிறேன். [விரைந்துபோய் மறைகிறார்]

சாவி:— (திடுக்கிட்டு) ஆ! எங்கு சென்றார்? திடீரென மறைந்துவிட்டாரே! ஆகட்டும்; இதோ பின் துடர்கிறேன்.

[வேகமாய்ப் போகின்றாள்]

அங்கம் 7 4-வது சீன்.

அக்கினியாறு.

எமதருமர்ஆற்றைத்தாண்டிச்செல்லுகிறார் சாவித்திரிபின்துடருகிறாள்

எம:—[தனக்குள்] இவ்வக்கினியாற்றைக்கடந்துவரமாட்டாள்; அவ்வளால் நிச்சயமாய் முடியவே முடியாது [போகின்றார்]

சாவி:—(எமதருமரைக்கண்டு) ஆ! அதோ போகின்றார்; சீக்கிரம் போய் அவர் மனத்தை இன்னொருமுறை யுருக்கவேண்டும். ஆனால் இம்முறை வாங்கும் வரத்தில் அன்னவரை ஏமாறறித் தான் நமது நாதனுயிரை யடையவேண்டும் [அக்கினியாறு குறுக்கிடுகிறது] ஆ! இனி என் செய்வேன்! இவ்வக்கினியாற்றை எவ்வாறு கடப்பது? கடவுளிடத்தே பாரத்தைப்போட்டு இதிலிறங்குவோம்; இறந்தாலும் நல்லதுதானே! [இறங்

ளுகிறாள்; அக்கினிமயமாயிருந்த ஆற்று நீரானது இருபுறங்களிலும் பிரிந்து வழிவிடுகின்றது ஆற்றைக்கடந்து விரைந்து சென்று எமதருமரையணுகி]

பாட்டு—நூதன பார்ஸிமெட்டு.

கேளுநங் கேளு இங்கொரு சேதி

ஏம:— ஹா! ஹா! ஹா!

சாவி:— நானுமென்ம னோன்பிரீதி வாழ்வன்றோநீதி

ஏம:— நானறிவேனிது ஞாயவிரோதம்

சாவி:— ஞாயவிரோதமி தாமென சொல்வீர்

ஏம:— நல்லதினி செல்லுவாய் நீ

சாவி:— நான் சென்றி றேனே தனி

ஏம:— உன் நாதனுயிர் கொடேன் வாதனை செய்திடா

தேதநிவிலகிப் போ

வசனம்.

ஏ பேதாய்! நான் எத்தனையோ முறைகளில் நல்ல வார்த்தைகளைச் சொல்லியும் கேளாது மறுபடியும் வந்துவிட்டனையே! இனி தாட்சண்யம் பார்ப்பதில் பிரயோஜனமில்லை கடைசி முறையாகச் சொல்லுகிறேன் இன்னும் என்னதான் செய்தபோதிலும் உன் நாதனுயிரைக் கொடுக்கமுடியாது இனிமேல் என்னைத் தொந்தரை செய்யாது திரும்பிச்சென்றுவிடு இன்றேல் என் பட்டணத்தில் அநேக கஷ்டப்படநேரிடும்.

சாவி:— சுவாமி! என்னை இன்னும் எவ்வளவு கஷ்டப்படுத்தினாலும் சரி எனக்கு என் பத்தாவின் உயிர்தான் வேண்டியது அதைக்கொடுத்துவிட்டால் இப்பொழுதே திரும்பிச்சென்றுவிடுகிறேன் தாங்கள் ஒருமுறை சாதித்ததைப்பலதடவையும் சாதிக்கிறீர்களேயொழிய எனக்கு என் பிராணநாதன் பேரிலிருக்கும் பற்று இவ்வளவினதென்று சற்றாவது கவனிக்கமாட்டேனென்கிறீர்கள் நம்இரண்டுபெயர்களுள்ளும் இருக்கும்ஏகத்தைப்பிரிப்பது அறக்கடவுளாகிய தங்களுக்கு நியாயமோ?

எம:— பெண்ணே! நான் செய்வதெல்லாம் உனக்கு அநியாயமாகத் தோன்றினாலும் என்மட்டிலும் அது நியாயமெனவே தோன்றுகின்றது. நீ இவ்வளவு தூரம் பேசுவதனால் கடைசிமுறையாக உன் பர்த்தாவின் உயிரைத்தவிர வேறு ஏதேனும் வேண்டியிருப்பின் கேள். தருகிறேன்.

சாவி:— (தனக்குள்) ஏது இனிமேல் பேசுவதில் பயனில்லை. எப்படியாவது இவரை ஏமாற்றித்தான் என் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். (பகிரங்கமாக) சுவாமி!

பங்காரு மோரி மோரி என்ற மெட்டு.

பல்லவி.

ஆனலொருவரம் யானும்மைக்கேட்கிறேன்
அன்பா யருளுவீர்

வசனம்.

அப்படியானால் ஒரே ஒருவரம் கேட்கிறேன். அதைத்தவறாமல் கொடுக்கவேண்டும்.

எம:— உன் நாதனுயிரைத்தவிர வேறு எதைக்கேட்டாலும் தவறாமல் கொடுக்கிறேன். ஆனால் இதையும் பெற்றுக்கொண்டு மறுபடியும் என் பின் தொடரக்கூடாது. அவ்விதம் சம்மதமானால்

ஷை பல்லவி.

மானேயுனக்கென்ன தான்வரம் வேண்டுமோ
வாகாய் வழுத்துவாய்

சாவி:— அநுபல்லவி.

மானுளெனக்கே மணமுடிந்திதுவரை
மக்கட்பேறின்றி வருந்தலானேன்
கானுவித்தக்கல்வி மானகவப்பேறு
நான்பெறவேண்டும் நல்குவீர்கோனே

ஏம:— பல்லவி யெடுப்பு.

நானிவ் வரந்தந்தே ஞலினியுன் னூரை
நாடிச் சென்றிடுவாய்

வசனம்.

கன்னியே! நீ விரும்பியவாறே உனக்குக் கல்வியறிவுள்ளமகப் பேறுண்டாமாறு அநுக்கிரகித்தேன் இனி ஊர் செல்

[மறைகிறார்]

சாவி:—ஆ! திடீரென மறைந்துவிட்டாரே! இதோ யானும் பின் தொடர்கிறேன். இப்பொழுது சிக்கிக்கொண்டா ரென்னிடம்

[போகிறாள்]

அங்கம் 7 5வது சீன்.

வைவச்சுதபுரி (எமலோகம்)

எமதருமர் வருகின்றார்; எல்லோரும் நமஸ்கரிக்கின்றனர்.

ஏம:— (சிம்மாதனத்திலமர்ந்து) அடே- தூதர்காள்! இதோ சத்தியவானுயிரைப்பிடித்து வந்தேன்; நீங்கள் தெரிவித்த பிரகாரம் சாவித்திரி மகா கற்பரசியாயிருக்கிறாள்; என்னைநேரிற் கண்டதுமல்லாமல் என்னைப்பின்தொடர்ந்து வந்து அக்கினியாற்றையுங் கடந்துவிட்டாள்; அவளுக்கு நாதன்பேரிலிருக்கும் பாசத்தால் ஒருவேளை இங்குவந்தாலும் வந்துவிடுவாள்; உடனே நமது கோட்டையின் வாயில்களனைத்தையும் மூடிவிடுங்கள்.

தூ:—அப்படியே செய்கின்றோம் [செல்கின்றனர்]

சாவி:— ஆ! இதுதான் எமலோகம்போலும்! [கோட்டையருகிற் செல்லகதவுகளெல்லாம் மூடியிருக்கின்றன] ஐயோ! இனிஎன் செய்வது? ஒரு வாயிலாவது திறந்தில்லையே! கடவுளே! நான் உண்மையான பதிவிரதையாயின் இக்கோட்டையின் வாயில்களெல்லாம் தானுகத்திறந்து கொள்ளவேண்டும். [டபீரெனச் சத்தங்கிளம்பி கதவுகள் யாவும் தானுகத்திறந்துகொள்கின்றன; சாவித்திரி உள் நுழைந்து எமதருமரையணுகி] சுவாமி! அடியாள் நமஸ்கரிக்கிறேன்.

எம:— ஆ! இன்னும் உன்னுசை ஒழியவில்லையா? இனிமேல் தொடருவதில்லை என உறுதி கூறினையே! மறுபடிம் ஏன்மீறி இங்கு வந்தாய்?

சாவி:— சுவாமி! நான் என் உறுதியில் அணுவளவும் பிசகினேனில்லை; தாங்கள்தான் தவறினீர்கள்.

எம:—(கோபத்தோடு) யானு தவறினேன்? எவ்விதம்?

சாவி:— சுவாமி! கோபிக்கவேண்டாம் எனக்குப் புத்திரப்பேறளித்தது ஞாபகமிருக்கிறதா?

எம:— ஆம் இருக்கின்றது.

சாவி:—ஸ்திரீகள் தம் நாயகனின்றி அதை எவ்வாறு அடைய முடியும்?

எம:— (மூக்கில் விரலை வைத்து) ஆ! மதிமோசம் போனேன். சாவித்திரி! உன் கற்பின் மகிமையே மகிமை; ஒரு வார்த்தையில் என்னைக் கட்டுப்படுத்திவிட்டாய்; நாரத மகாமுனிவர் சொன்னதுபோல் நடந்துவிட்டது [நாரதர் தோன்றுகிருர்] வரவேணும்! வரவேணும்! முனீஸ்வரரே! பந்தயத்தில் யான் தோற்றுப்போனேன் மன்னித்துக்கொள்ளும்.

நார:— எமதருமா! இது அற்பகாரியம்; இன்னும் எவ்வளவோ அரிய பெரிய செய்கைகளை யெல்லாம் கற்பின் விசேஷத்தால் ஸ்திரீகள் செய்துமுடிப்பார்கள். உண்மைதானே?

எம:— சந்தேகமென்ன! நமது சாமளைக்கு சாவித்திரியின் மூலமாக கற்பிலக்கணத்தைக் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன்.

நார:— ஆஹா! அவ்விதமே செய்

[தூதனுப்ப சாமளைவருகிருள்]

எம:— சாமளா! நாதனுயிருக்காகப் பூதலத்தினின்றும் வேதனைகளையுங்குறியாது சாதனைப்பலத்தாலிப் போதிங்கடைந்த ஏதமில் சாவித்திரி மாதிதோ நிற்கின்ருள்; அவளிடத்திலிருந்து கற்பினிலக்கணத்தைத் தெரிந்துகொள்வாய்.

சாம:— நாதா அவ்வாறேஆகட்டும் (சாவித்திரியையணுகி) அம்மா! தயவு செய்து சொல்லுங்கள்.

சாவி:— மகுட நோண்டிச்சிந்து.

மாமரு வேமன்மன் காமுறுசாமளமே
மகாமகத்வ
மாதர்க ணீதிபி ஞதம தோதுவ னேதகி நீமலேயேல்
கோமள சுந்தா மாமடமுந்திடவே
குணனுபோகக்
கோதறு தந்தையின் காதலி வந்தனைப் போதமி குந்திடலே
நேமமி குத்தெழி லார்மதி யுற்றபினே
நிதார்த்தமோதி
நீதமும் வித்தையை யோதிவிளைத்திடு சாதகமொத்ததுவே
மாமணமுற்றபி னேகொழு நற்கினிதாய்
மனேகரங்கொள்
மதனிரதியுமெனச் சதிபதிகளொருமித் திதமொடு வாழ்ந்திடலாம்
வீடலில் மெத்தவு நாடிடா துத்தமமாய்
எந்நாளுமன்னவன்
உண்டபினுண்டு துயில்கொண்டபின்கொண்டெழல்முன்னெ றுசை
[விண்டிட்டலாம்
தேடரிதாகிய தேவென வேமதித்தல்
சிந்தையினதன்
செப்பிய தொப்பிவெறுப்பற நட்பின டப்பவள் கற்புடையாள்
நாணமடம்பய மானவே யிர்ப்புடைமை
நாடோறும்பத்தா
நாமமுறைத்திடா வாய்மையகத்துறு பாமினிஸ்ரீமதியாம்
பேணிடற் கன்னேயைப் பேசிடு முவமானம்

பெண்டீர்க்கழகெதிர்

பேசிடார்பணியிற் கூசிடாவினையாள் நேசம் வேசி போலாம்
அன்னை முதலிடை மன்னன் கடை மைந்தர்

பெண்களின் காப்பே

அயலகஞ்செல்லா துயர் பெரு வாழ்வே நயம்பட மொழிதனுமாம்
நன்னய விற்பன கன்னியர் கற்பிதுவே

என் அம்மா அம்மா

கானறிந்தவரை தானிசைந்தியம்பி னேனறிந்திடுவீர்

வசனம்.

அம்மணி! எனக்குத்தெரிந்தமட்டும் சொன்னேன்; குற்றமிருப்பின் மன்னிப்பீர்களாக.

எம:— (நாரதரை நோக்கி) சுவாமி! வாருங்கள்; எல்லோருமாகச் சென்று சத்தியவானை உயிர்ப்பித்து பட்டாபிஷேகம் செய்து வருவோம்.

நார:— ஆஹா! அவ்விதமே! [எல்லோரும் காட்டையடைந்து எமதருமரால் உயிர்ப்பிக்கப்பெற்ற சத்தியவான் சகிதம் சாலவபுரி செல்கின்றனர். துயுமத்ஸேனரும் பத்மாட்சியும் கண்களையும் இராச்சியத்தையும் பெற்று அரண்மனையில் சத்தியவானையும் சாவித்திரியையும் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தனர். இவர்கள் சென்றதும் சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் பட்டாபிஷேகம் நடக்கின்றது.]

மங்களம்.

ஹாவோஜி ஹாவ் ஜேண்டில்மேன் என்ற மெட்டு.

பல்லவி.

மங்களம் மங்களமே நித்யஜெய (மங்)

அநுபல்லவி.

துங்கத்துங் துளத்துற்ற தொந்திக்கணபதிக்கும்
சங்கத்துங் துங்தேவர்க்கும் நித்ய ஜெய (மங்)

சரணம்.

திங்களணிந்தவர்க்கும் தேவி மீனாம்பிகைக்கும்
செங்கைவேல் மயிலவர்க்கும் நித்ய ஜெய (மங்)

அறுபத்து நாலுவிளை யாடலுடைப்பதிக்கும்
அறுபத்து மூவருக்கும் நித்ய ஜெய (மங்)

சீரார்சம்பன்னச் செல்வ ஸ்ரீமான் கிருஷ்ணசாமிப்
பேரார் பாரதிமாலுக்கும் நித்ய ஜெய (மங்)

பார்மிசை சதாசிவன் பாமழைமுகிலென
நாருறுஞ் செந்தமிழ்க்கும் நித்ய ஜெய (மங்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

ஆறுமுகக்கடவுள்பேரில் பாலபிஷேகக் காவடிச்சிந்து விலை 0—1—0

தேசாபிமானிகள் திலகரத்தின மாலிகா விலை 0—2—0

கந்தன் திருவிளையாடலெனும் வள்ளியம்மை சரித்திரம்
முதற்பாகம் விலை 0—3—0

ஷை இரண்டாம்பாகம் விலை 0—3—0

உ

இந்நாடகாசிரியரியற்றிய

கண்ணகி

கோவிலன் சரித்திரம்.

நேயர்காள்!

முற்காலத்துப் பாண்டியநாட் டதிபதியான நெடுஞ்செழிய னென்பான் காளியம்மன் கோவிலொன்றில் திருவிளக் கேற்றுதிருக் குமாறு தன் பிரஜைகளுக்கு உத்திரவிட அக்கட்டளையை மீறித் தன் வியாபார நலத்திற்காக அநுதினமுந் தவறாது மேற்சொல்லிய கோவிலில் விளக்கேற்றிவந்த வாணியச்செட்டி யொருவனைக் கொல் லுவித்தா னாதலின் அக்கொடுமையைப் பொறாது காளிதேவியே கண்ணகியென அவதரித்துப் பழிக்குப் பழிவாங்கித் தன் தொண்ட னுக்கு மோட்ச மளித்ததால் "எளியாரை வலியார் அடித்தால் வலி யாரைத் தெய்வம் அடிக்கும்" என்னும் முதுரையை விளக்கிக்காட் டும் இச்சரித்திரத்தை யாவரும் படித்தறியவேண்டிய தவசியம். இந்நாடகத்தை எத்தனையோ ஆசிரியர்கள் புத்தகரூபமாக எழுதி யுள்ளாரகளெனினும், சிருங்கார, வீர, சோக பாகங்களில் சந்தப் பத்திற் கேற்கும் வர்ணமெட்டுக்களில் பாடல்களும் சாதுரிய வச னங்களும் அமையப்பெற்ற இப்புத்தகத்தை ஒரு முறை பார்ப் போர் மற்றையோரா லியற்றப்பெற்ற புத்தகத்தில் மனத்தைச் செலுத்தாரென்பது திண்ணம். அன்றியும் இவ்வாசிரியர், தான் எழுதிய நாடகங்களனைத்தையும் அநேக இடங்களில் தகுந்த நடி கர்களைக்கொண்டு நடிக்கச்செய்து அரங்கேற்றிக் கீர்த்தியும் சன்மா னமும் பெற்றிருப்பதே அதற்குப் போதிய சான்றாம்.

முதற்பாகம்	விலை 0—3—0
இரண்டாம் பாகம்	விலை 0—3—0

∴

த. கிருஷ்ணசாமிப் பிள்ளை,

புத்தகவியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

உ

கண்ணன்

திருவிளையாடல்களிலொன்றாகிய

அல்லி அரசாணி சரிதம்.

ஆண்வாடையே ஆகாதென அகங்கரித்திருந்த அல்லியரசாணியை அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையின் போது அரவஉருக்கொண்டு அநுபவித்து அந்தத்தில் மணம் புரிந்துகொண்ட அரியபெரிய இச்சரித்திரம் அனைவரும் வாசித்து ஆனந்தமடையுமாறு தெள்ளிய வசனத்தில் சந்தர்ப்பத்திற் கேற்ற பாட்டுக்கள் சகிதம் அச்சாகி வெளிவந்திருக்கிறது.

முதற்பாகம் விலை 0—3—0. இரண்டாம் பாகம் விலை 0—3—0

குலசேகரியென்னும்

நல்லதங்காள் சரித்திரம்.

பதியின் வார்த்தையை மீறுவதாலும் குடும்பத்தில் ஒருவர்க்கொருவர் கொள்ளும் பொறாமையினாலும் உண்டாகும் கெடுதல்களை விளக்கிக்காட்டும் புண்ணியசரித்திரமாதலால்இஃது ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டியது அத்தியாவசியம்.

முதற்பாகம் விலை 0—3—0. இரண்டாம்பாகம் விலை 0—3—0

த. கிருஷ்ணசாமிப் பிள்ளை,

புத்தகவியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

வெளியாகிவிட்டது! உ வெளியாகிவிட்டது!

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற மஹாவித்வான்

T T, சங்கரதாஸ் சுவாமியவர்களின் மாணாக்கர்

சந்தச்சரபம் ஷண்முகதாஸ் அவர்களியற்றிய

மன்மதன் எரிந்தகட்சி கேள்விலாவணி.

நேயர்களே கவனியுங்கள்!

நம் தமிழ் நாட்டில் இதுவரை எவ்வளவோ லாவணிகள் வெளியாகியிருக்கின்றன. எனினும் இதைப்போன்ற விசித்திரமான புத்தகம் வெளிவந்திராதென்பதை இதைவாங்கி வாசிக்கும் ஒவ்வொருவரும் நன்கறியலாம். இதில் மன்மதன் தேவசபைக்குச் செல்லுதற்குத் தன் பாரியாளான இரதியிடத்தில் விடைகேட்குங்கால் இருவருக்கும் நடக்கும் சிங்கார ரஸத் தர்க்கங்களும், அங்கிருந்து மன்மதன் தனது இருப்பிடமடைந்ததும் இரதி எதிர்கொண்டழைத்தலும், தன் நாயகனது முகம் வாட்டமுற்றிருப்பதை யுணர்ந்து, காரணமென்னவென விசாரித்தலும், தேவசபையில் நடந்தவற்றைச்சொல்லி, சிவனின் தவத்தை யழிக்கச்செல்ல மன்மதன் விடைகேட்குங்கால் இரதி துயருற்றுத்தடுத்தலும், அன்னவட்கு மன்மதன் தேறுதல் சொல்வதுமாகிய தர்க்கங்களும், தெருப்பந்தல் சிங்காரங்களும், எதிர்க்கட்சியாருடன் வாதாடும் பற்பல கடினமான கேள்விகளும், மன்மதன் எரிந்த செய்தியையறிந்த இரதி புலம்பலும் படிப்போர் மனம் பரவசமுறுமாறும், கேட்போர் மனம் செக்கலித்திடுமாறும் இந்நூல் தான் பார்ஸீ முதலிய தற்கால நாகரீக வர்ணமெட்டுக்களில் நன்றமைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லின் இப்புத்தகத்தை ஒருமுறை படித்துப் பார்க்கில் மறுமுறையும் படிக்கும்படி வற்புறுத்துமென்பதற்கையமில்லை. இதன் விலை 0 6 0

ஷியார் இயற்றிய போட்டா போட்டி கள்ளப்பாட்டு
இதுவரையில் வெளிவராதது இரண்டுகள்ளன்
களுடைய தர்க்கங்கள் அடங்கியுள்ளது 0 2 0

ஷியார் இயற்றிய மஹாத்மா காந்தி தியானம்
மதுவிலக்கு மகத்துவம் அடங்கியது 0 1 0

T. கிருஷ்ணசாமிபிள்ளை,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

வந்துவிட்டது! உ வந்துவிட்டது!!

முந்துங்கள் புத்தகத்திற்கு முந்துங்கள்

முத்தமிழ் க்ஷேத்திர

M. E. M.

பாஸ்கரதாஸரவர்களால்

இயற்றப்பெற்ற

அற்புத நூதனக் காவடிச்சிந்து.

இதில் அடங்கியுள்ள பாடல்களும் வர்ணமெட்டுக்களும் நவரஸம் பொருந்தியதாகவே இருக்கும். இதைப்போன்ற விசித்திரமான புத்தகம் வெளிவந்திராதென்பதை இதைவாங்கி வாசித்தும் ஒவ்வொருவரும் நன்கறியலாம். இதன் விலை அணா 2.

—※—

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற மஹா வித்வான்

T. T. சங்கரதாஸ் சுவாமியவர்களின்

மாணவரான சந்தச்சரபம்

M. S. S. சண்முகதாஸரவர்களியற்றிய

பக்தி ஆனந்தக் கேலிப் பதங்கள்.

[இரண்டாமபாகம்]

திருமயிலம் பெருநூலாசிரியர் சி. தணிகாசல சுவாமியவர்கள் திருவாய் மலர்ந்தருளிய முகவுரையுடன் கூடியது.

நேயர்களே கவனியுங்கள்!

இதினருமை, பெருமை, இனிமைகளை எடுத்துரைப்பதென்றால் சாத்தியப்படாது சுருங்கச்சொல்லின் படிப்போர் மனம் பரவசமாகும். கேட்போர் மனம் கெக்கலித்திடும். இந்துஸ்தான், பார்ஸி, முதலிய தற்கால நாகரீகவர்ணமெட்டுக்களில் நன்கமைந்திருக்கின்றன. இதுதான் நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள் தமாஷான பாடல்களென்றால் இதுவே என்பதும் புத்தகத்தைவாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கே நன்கு விளங்கும். விலை அணா 6

T. கிருஷ்ணசாமிபிள்ளை,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.